# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - NOVEMBER 2025
VOL. 23 ISSUE 8 - 28 PAGES - Rs. 21/-

நவம்பர் 2025

உள்ளே...

சந்ததிகளுக்குக் கனம்
தகப்பனின் பராமரிப்பில்...
நீங்கள் இன்னும் உண்மையாக இருக்கிறீர்களா?



## பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் *உன்மேல் நிழலிடும்*

(லூக்கா 1:35)




# இஸ்ரேல் ஜெப கோபுரம்

## இதேபோன்ற காலத்தில் தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுதல்







**தொடங்கப்பட்டது முதல் ஊழியத்தின் பலன்:**

இஸ்ரேல் ஜெப கோபுரத்திற்கு 28000க்கும் மேற்பட்டோர் நேரில் வந்திருக்கிறார்கள். உலகம் முழுவதிலுமிருந்து 7000க்கும் மேற்பட்ட ஜெப வீரர்கள் வருகை புரிந்துள்ளனர். 25க்கும் மேற்பட்ட சபையினர், வேதாகம பாட குழுவினர் வந்திருக்கின்றனர். 30க்கும் மேற்பட்ட அர்ப்பணிப்புள்ள சர்வதேச தன்னார்வ ஊழியர்கள் உள்ளனர். 150க்கும் மேற்பட்ட பெரிய கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. உலகளாவிய இயேசு அழைக்கிறார் அமைப்பில் 118 ஜெப கோபுரங்கள் செயல்படுகின்றன.

ஒலிவமலையையும் பழைய பட்டணத்தையும் நோக்கியவண்ணம், ஜெருசலேம் நகரத்தின் மையப் பகுதியில் 20வது மாடியில் அமைந்துள்ள இஸ்ரேல் ஜெப கோபுரம், தீர்க்கதரிசன காவற்கோபுரமாக, தொடர்ந்த மன்றாட்டு பிரார்த்தனையின்மூலம் பூமியையும் பரலோகத்தையும் இணைக்கிற இடமாக விளங்குகிறது. இங்கு ஏறெடுக்கப்படும் பிரார்த்தனை, தேசங்களை ஜெபத்தில் இணைக்கவேண்டுமென்ற தேவனின் நித்திய அழைப்பை நிறைவேற்றுகிறதாக, விரைவிலேயே நடக்க இருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம்பண்ணுகிறதாக இருக்கிறது.

### உலக அளவில் 12 ஆண்டு கால பணி

இந்தியா, அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், காமரூன், கனடா, சிலி, சீனா, கொலம்பியா, செக் குடியரசு, டொமினிக்கன் குடியரசு, இங்கிலாந்து, எத்தியோப்பியா, பிரான்ஸ், ஜெர்மனி, ஹாங்ஹாங். ஜப்பான், கென்யா, மெக்ஸிகோ, நெதர்லாந்து, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், ரஷ்யா, தென் கொரியா, இலங்கை, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இஸ்ரேல் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து மாதந்தோறும் சராசரியாக 100 ஜெப வீரர்கள் "என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்" என்ற ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திற்கேற்ப இங்கு ஜெபிக்கின்றனர்.

**"சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்; தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது" (யோவேல் 2:1)**

தினமும் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம், எபிரெயம், ஸ்பானீஷ், கொரிய, ரஷ்ய மொழி பேசும் ஜெப வீரர்களால் பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது. பண்பாட்டு எல்லைகளைத் தாண்டி ஆராதனையையும் விண்ணப்பங்களும் எழுகின்றன. இந்த மொழி குழுக்கள், விசுவாசிகள் மத்தியில் ஒற்றுமையையும் இஸ்ரேலின் எதிர்காலத்திற்காக, உலகளாவிய எழுப்புதலுக்காக, தேசங்களின் மறுரூபத்திற்காக கூடி ஜெபிப்பதையும் காட்டுகின்றன.

**இஸ்ரேல் ஜெப கோபுரத்தில் இந்த ஆண்டு முழுவதும் பத்து முக்கிய கூடுகைகள் நடத்தப்பட்டன. அவற்றுள் சில...**




**கிறிஸ்துமஸ் இன்னிசை நிகழ்ச்சி** - “Light”- கொரியாவிலிருந்து எருசலேமில் அன்பும் சந்தோஷமும் என்ற, உலகின் ஒளியாகிய கிறிஸ்துவை கனப்படுத்தும் ஆராதனை நடத்தப்பட்டது.

**பூரீம் கொண்டாட்டம்** - தேவன் அளிக்கும் விடுதலையிலும் உண்மையான உடன் படிக்கையிலும் களிகூரும் நிகழ்வு ShemenSazon சபையினரால் நடத்தப்பட்டது.



**பஸ்கா கருத்தரங்கு** - தேவ ஆட்டுக்குட்டியானவரால் இஸ்ரேலுக்கு கிடைக்கும் மீட்பை குறித்து இரண்டு நாட்கள் கருத்தரங்கை, லண்டனை சேர்ந்த Shabbat Keeping Ministry நடத்தியது.

RemZion University **பட்டமளிப்பு விழா** - இஸ்ரேலிலும் மற்ற தேசங்களிலும் தேவ நோக்கத்திற்காக அர்ப்பணித்த ஊழியர்கள் கனப்படுத்தப்பட்டனர்.





**டொமினிக்கன் குடியரசு போதகர்கள் குழு** - டொமினிக்கன் குடியரசை சேர்ந்த போதகர்கள், இஸ்ரேலுக்காகவும் உலக ஒற்றுமைக்காகவும் இணைந்து மன்றாடினர்.

YehovaEry **ஆண்டு விழிப்புணர்வு ஜெபம்** - இந்திய பெண்கள் குழுவினர் உள்ளமுடைந்தவர்களுக்காக மனமுருகி ஜெபித்தனர்

Holocaust Survivors’ Worship Evening - உயிர் பிழைத்தவர்களும் ஜெப வீரர்களும் சேர்ந்து சுகமளிக்கிற, சந்ததியினரை தேவ அன்பினால் இணைக்கிற ஆராதனையை நடத்தினர்.

ஜெருசலேம் ஆசீர்வாத வாலிபர் மாநாடு - கொரியாவை சேர்ந்த வாலிபர்கள் ஏறக்குறைய 140 பேர் ஜெருசலேமுக்காக கூடி ஜெபித்தனர்; இஸ்ரேலை ஆசீர்வதிக்கும் தங்கள் அழைப்பை ஏற்றனர்.





## மறுரூபமாகிய தன்னார்வல ஊழியர்களின் வாழ்க்கை

தாழ்மையும் பக்தியுமுள்ள தேவ ஊழியர்களாகிய தன்னார்வலர்களின் மூலமாகவே ஜெப கோபுரம் இயங்குகிறது.

- கனடாவை சேர்ந்த ஜோஸ் ஃப்ரான்சிஸ்கோ, மற்றவர்களுக்கு ஊழியம் செய்வது ஆசீர்வாதமாகவும் தேவனை கிட்டிச்சேரவும் வாய்ப்பளித்தது என்று நன்றியை தெரிவித்தார்.
- இன்னொரு தன்னார்வ ஊழியரான ஸெல்லன், மனச்சோர்விலிருந்து மூன்று நாட்கள் பிரார்த்தனை மூலம் விடுபட்ட ஒருவரின் வல்லமையான சாட்சியை பகிர்ந்துகொண்டதோடு, ஜெப கோபுரத்திற்கு அடியெடுத்து வைத்ததும் அதோனியின் (தேவன்) பிரசன்னத்தை அளவில்லாமல் உணர முடிந்ததாகவும் சாட்சி கூறினார்.

**ஜெப கோபுரத்தில் ஊழியம் செய்யும்போது யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களை மறுரூபமாக்குவதோடு மட்டுமல்லாமல் ஜெபிக்கிறவர்களும் ஆசீர்வாதம் பெறுகின்றனர் என்பதை இந்தச் சாட்சிகள் காட்டுகின்றன.**

## எதிர்நோக்குகிறோம்

இன்னொரு காலத்திற்குள் இஸ்ரேல் ஜெப கோபுரம் சென்றாலும் அதன் இலக்குகள் மாறாதவையாகவே உள்ளன.

- இஸ்ரேலுக்காகவும் தேசங்களுக்காகவும் 24X7 மணி நேரம் தொடர்ந்து வேண்டுதல்
- அதிக சர்வதேச வருகையாளர்களை வரவேற்கும்வண்ணம் உபசரிப்பை விரிவாக்குதல்
- ஜெருசலேமிலுள்ள பல்வேறு விசுவாச சமுதாயத்தினரிடையே ஊழியம் செய்யும் உள்ளூர் திருச்சபைகளை பெலப்படுத்துதல்
- அடுத்த தலைமுறை ஜெப வீரர்களை பயிற்றுவித்தல்
- தீர்க்கதரிசன ஜெபத்தை மேம்படுத்துவதற்காக உலகளாவிய ஊழியங்கள் மற்றும் திருச்சபைகளோடு இணைப்பை உருவாக்குதல்

தெய்வீக அழைப்பை ஏற்று தன்னார்வ ஜெப வீரராக இணைந்து கொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கிறோம். திறப்பின் வாசலில் நிற்கும் உன்னத அனுபவத்தைப் பெற்று, இஸ்ரேலுக்கும் தேசங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள தேவ வாக்குத்தத்தங்களில் பங்காற்றுங்கள். மன்றாடுவதற்கான இந்தப் புனிதமான வாய்ப்பை ஏற்று தேவனுடைய இருதயத்தின் நோக்கத்தைத் தாங்கும்படி 10 முதல் 14 நாட்கள் ஜெப கோபுரத்தில் ஊழியம் செய்ய அனைவரையும் அழைக்கிறோம்.

Israel Prayer Tower, 34 Ben Yehuda Street, 20th Floor, Jerusalem, Israel
இணையதளம்: www.israelprayertower.org
மின்னஞ்சல்: intl@jesuscalls.org
தொடர்பு எண்கள் : +91 8056944244; +972 52-720-2244

# சந்ததிகளுக்குக் கனம்



அன்பானவர்களே, நீங்கள் தமக்கு ஊழியஞ்செய்வதினால் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பின்வரும் சந்ததியையும் ஆசீர்வதிப்பதாக ஆண்டவர் இயேசு வாக்குக்கொடுக்கிறார். நவம்பர், "**ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்**" (யோவான் 12:26) என்ற வாக்குத்தத்தத்திற்கேற்ப, தேவனுக்கு நீங்கள் செய்த ஊழியத்தை அவர் நினைவுகூருகிறதும் நீங்கள் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறதுமான மாதம் ஆகும். எவ்வளவு மகிமையான வாக்குத்தத்தம்! தேவனுடைய ராஜ்யத்திற்காக நீங்கள் செய்யும் உண்மையான எல்லா கிரியையும், எல்லா ஜெபமும், எல்லா தியாகமும் ஆசீர்வாதத்திற்கான வித்தாக மாறுகிறது; அது உங்களுக்கு கனத்தைக் கொண்டு வருகிறது. வேதம், "**நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்; அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள்**" (நீதிமொழிகள் 20:7) என்று கூறுகிறது. நீங்கள் ஆண்டவருக்கு உண்மையாய் ஊழியஞ்செய்யும்போது, அவர் உங்களை ஆசீர்வதிப்பதோடு, உங்கள் பிள்ளைகளையும், வரப்போகும் தலைமுறையையும் ஆசீர்வதிப்பார்.

தேவன் தம்முடைய உண்மையுள்ள ஊழியர்களின் பிரயாசத்தை நினைவுகூருகிறார். நீங்கள் ஜெபத்தின் வாயிலாக, ஊழியத்தின் வித்துகள் வாயிலாக, இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு காணிக்கை அளிப்பதன் வாயிலாக ஆண்டவரை எவ்விதம் கனம்பண்ணுகிறீர்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார்; பதிலுக்கு உங்கள் தலைமுறைகளை ஆசீர்வதிப்பதாக வாக்குக்கொடுக்கிறார். "**கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார். கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார்**" (சங்கீதம் 115:12-14) என்று சங்கீதக்காரன் அழகாக எழுதுகிறான். ஆம், நீங்கள் ஆண்டவரை முழு இருதயத்தோடும் நேசித்து, உத்தமமாக நடப்பதால், அவரது தயை உங்கள் வீட்டாரை தொடரும்; அவரது பாதுகாப்பின் கரம் உங்கள்மேல் தங்கும். "**கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்**" (சங்கீதம் 112:1,2) என்று வேதம் கூறுகிறது. நீங்கள் கர்த்தருக்குப் பயந்து அவரை கனம் பண்ணுவதால், தேவன் நீதியினால் உங்கள் தலைமுறைகளை ஸ்தாபிப்பார்.

## தேவ சமுகத்தால் வரும் கனம்

"**...உன் வீட்டாரும் உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்து கொள்வார்கள்... என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்...**" (1 சாமுவேல் 2:30) என்று தேவன் ஏலியிடம் கூறினார். ஆம், தம்மை கனம்பண்ணும்போது, உங்களையும் உங்கள் தலைமுறையினரையும் தம் சமுகத்தில் என்றென்றைக்கும் காத்துக்கொள்வதாக தேவன் வாக்குக்கொடுக்கிறார். தேவன் உங்களைக் கனம் பண்ணுவது, அவர் உங்கள்பேரில் அக்கறையாக இருப்பதைக் காட்டுகிறது.

கெத்செமனேக்கு செல்வதற்கு முன்பு இயேசுவும் அவரது சீஷர்



Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org



**நீங்கள் கர்த்தருக்குப் பயந்து அவரை கனம்பண்ணுவதால், தேவன் நீதியினால் உங்கள் தலைமுறைகளை ஸ்தாபிப்பார்**

களும் செய்தவற்றை எண்ணிப்பாருங்கள். பிதா, தனக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுத்து விட்டார் என்பதை அறிந்திருந்தாலும், இயேசு, தம் வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, அரையிலே சீலையைச் சுற்றிக்கொண்டு, தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவத் தொடங்கினார் (யோவான் 13:3-5). என்னே தாழ்மை, என்னே அன்பு! அவர்கள் பாதங்களை அவர் மெதுவாகக் கழுவினார்; முட்களாலும் கரடுமுர டான பாதைகளாலும் சிராய்க்கப்பட்ட பாதங்களை கழுவியதன் மூலம், "உங்களுக்காக இந்தப் பாதையில் நான் நடந்தேன்" என்று அவர்களுக்கு நினைவுப்படுத்தி னார். காயப்பட்ட அந்தப் பாதங்களை அவர் இரக்கத் துடன் முத்தமிட்டார். பூமியில் அவர் ஊழியம் செய்த நாட்களில் அவர்கள் தம்முடன் நடந்தார்கள் என்பதை அறிந்திருந்தார்; அவர்கள் பேரில் அக்கறை காட்டியதன் மூலம் கனப்படுத்தினார். அதேபாதங்கள் உலகெங்கும் சென்றன; அவற்றின் மூலம் இயேசுவின் ராஜ்யம் பூமியெங்கும் ஸ்தாபிக்கப்பட்டது. அதே இயேசு, இன்றைக்கு உங்கள் அருகில் நடக்கிறார்; இரக்கத்துடன் உங்கள் கண்ணீரை துடைக்கிறார்; உங்கள் ஆத்துமாவை தேற்றுகிறார். தமக்கு ஊழியம் செய்கிறவர்களை அவர் கனப்படுத்துகிறார்; அவர்கள் ஆவியை புதுப்பிக்கிறார்; அவர்களுக்குப் புதுப்பெலனை கொடுக்கிறார்.

தொலைக்காட்சியில் ஒரு நேரலை ஜெபத்தின்போது, ஷேரன் என்ற வாலிப பெண் அழைத்தாள். அவள், "அங்கிள், என்னுடைய அம்மாவுக்கு மார்பில் புற்றுநோய் இருக்கிறது. இப்போது சிகிச்சையில் இருக்கிறார்கள். தயவு செய்து அவர்களுக்காக ஜெபியுங்கள்" என்று கூறினாள். அந்தக் குடும்பத்துக்காக மனதுருகி, நான், "ஆண்டவர் இயேசுவே, உம் மகளை இப்போதே தொடும். புற்று நோயின் அறிகுறியே இல்லாமற்போகவேண்டும். அதை வேரோடு பிடுங்கிப்போடும். அடுத்த முறை சோதிக்கும் போது, நோயின் அடையாளமே இருக்கக்கூடாது" என்று ஜெபித்தேன். தம் பிள்ளைகளின் கூப்பிடுதலுக்குச் செவி கொடுக்கும் ஆண்டவர், சுகப்படுத்தும் தம் கரத்தை நீட்டி னார். விரைவிலேயே, அந்தக் குடும்பத்தினர் சந்தோஷத் தோடு அழைத்தார்கள். மறுமுறை அவர்களை சோதித்த மருத்துவர்கள், "புற்றுநோயின் அடையாளமே இல்லை. எல்லாமே இயல்பாக காணப்படுகிறது" என்று ஆச்சரியப் பட்டார்கள். என்ன நடக்குமோ என்ற திகைப்பும், பயமும் நிறைந்திருந்த 2020ம் ஆண்டில் இது நடந்தது. மகிமை தாஸ், அவரது மனைவி கீதா சார்லெட், பிள்ளைகள் எஸ்தர், இவாஞ்சலின் ஷேரன், சாமுவேல் ஆகியோரின் குடும்பத்தில் ஆண்டவர் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றினார். இன்றைக்கும் தேவ கிருபையால் சகோதரி கீதா, பூரண சுகத்தோடு திடமாக இருக்கிறார்கள். இந்த அற்புதத்தைச் செய்ததற்காக ஆண்டவரை மாத்திரமே மகிமைப்படுத்த முடியும். மெய்யாகவே அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

எவ்வளவு ஆச்சரியமான தேவனை நாம் சேவிக்கி றோம்! அவரில் விசுவாசம் வைத்து கனம்பண்ணுகிறவர் களை அவர் கனம்பண்ணுவார். நீங்கள் எவ்வளவு வேதனையை, போராட்டத்தை எதிர்கொண்டாலும், தம் சீஷர்களின் பாதங்களை கழுவிய அதே ஆண்டவர் உங்க ளோடிருப்பார்; உங்கள்பேரில் அக்கறை காட்டுவார்; ஆறுதலளிப்பார்; தேற்றுவார்; உயர்த்துவார். அவரது அன்பு ஒருபோதும் மாறாது.

### தேவ ஆவியின் மூலமாக, தேவ வல்லமையினால் வரும் கனம்

இயேசு, "**நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தரு ளுவார். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்**" (யோவான் 14:15-17,21) என்று கூறியுள்ளார். இயேசு, மரணத்திலிருந்து உயிரோடு எழுந்த பிறகு, கதவுகளை மூடிவிட்டு பயத்தாலும், அவநம்பிக்கையாலும் நடுங்கிக் கொண்டிருந்த தம் சீஷர்களுக்கு தரிசனமானார். அவர் திடீரென அவர்கள் மத்தியில் தோன்றி, "உங்களுக்குச் சமாதானம்" என்றார். பிறகு அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார் (யோவான் 20:19,22). பயத்திலிருந்த மனுஷரை அவர் ஊதி தைரியமான சாட்சிகளாக மாற்றினார். அவரது ஆவி, அவர்களது பயத்தை விசுவாசத்தாலும், பெலவீனத்தை வல்லமையாலும் துக்கத்தை சந்தோஷத்தாலும் நிரப்பியது.

வேதத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் கொர்நேலியுவின் கதையை அனைவரும் அறிவோம். தேவ தூதன் ஒருவன் அவனுக்குக் காணப்பட்டு, "**உன் ஜெபங்களும் ஏழைகளுக்கு நீ செய்யும் தான தர்மங்களும் தேவனுக்கு முன்பாக நினைப்பூட்டுதலாக எழும்பின**" என்று கூறினான் (அப்போஸ்தலர் 10:4). கொர்நேலியுவின் வீட்டுக்கு பேதுரு அழைத்துவரப்பட்டபோது, தேவன், அவன்மீதும் அவன் குடும்பத்தார் மீதும் தமது பரிசுத்த ஆவியை ஊற்றி கனப்படுத்தினார் (அப்போஸ்தலர் 10:44).

பிரியமானவர்களே, நீங்கள் இயேசுவை கனப்படுத்து வதால், அவர், ஜீவனை அளிக்கும் தம் ஆவியை உங்க ளுக்குள் ஊதுவதற்கு விரும்புகிறார். ஒருவேளை பயம்



நீங்கள் இயேசுவை கனப்படுத்துவதால், அவர், ஜீவனை அளிக்கும் தம் ஆவியை உங்களுக்குள் ஊதுவதற்கு விரும்புகிறார்

உங்களைப் பற்றியிருக்கலாம்; ஏமாற்றம் உங்களை பேசவிடாமல் மௌனமாக்கியிருக்கலாம். ஆனால், அவரது ஆவி உங்களை நிரப்பும்போது நீங்கள் மறுபடியும் எழும்புவீர்கள். தைரியமாக பேசுவீர்கள்; அதிகாரத்துடன் நடப்பீர்கள்; அவரது ராஜ்யத்தை வல்லமையுடன் கட்டுவீர்கள். கிறிஸ்துவின் ஒளி உங்கள் மூலமாக பிரகாசிப்பதை உலகம் காணும்.

ஈரோட்டை சேர்ந்த சகோதரி ரூத் சத்யாவின் வாழ்க்கையை இந்த சத்தியம் உயிர்ப்பித்தது. "2007ம் ஆண்டில் நான் ஏழு அசுத்த ஆவிகளால் ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் வாதிக்கப்பட்டேன். என்னை பல கோயில்களுக்கு அழைத்துச் சென்று அதிக பணத்தை என் கணவர் செலவழித்தார். ஆனால், பலன் ஏதுமில்லை. பெதஸ்தா ஜெப மையத்தில் சிறப்பு ஆசீர்வாத கூட்டம் நடப்பதாக என் நாத்தனார் கூறினார்கள். மிகவும் பெலவீனமான நிலையில், நம்பிக்கையற்றவளாக அங்கு வந்தேன். என் கணவர் என்னை தாங்கிப் பிடித்து அழைத்து வந்தார். அங்கு பாதையில் எழுதப்பட்டிருந்த வேத வசனங்கள் என்னை பெலப்படுத்தின. அங்கிருந்த ஜெப வீரர்கள் எனக்காக ஊக்கமாக ஜெபித்தனர்; நீங்கள் சாட்சியாக திரும்புவீர்கள் என்று கூறினர். அந்தக் கணமே என் ஆவியை விட்டு பெரும்பாரம் ஒன்று அகல்வதை உணர்ந்தேன். என் கணவரிடம், "என் கையை விட்டுவிடுங்கள். நானே நடப்பேன்" என்று கூறினேன். அன்றிலிருந்து நான் பூரண விடுதலை பெற்றேன். இன்றைக்கு என்னை விடுவித்த ஆண்டவருக்குள் என் குடும்பம் களிகூருகிறது" என்று கூறுகிறார்கள்.

சகோதரி ரூத்தை விடுவித்த அதே இயேசு, இன்றைக்கு உங்களையும் விடுவிக்க ஆயத்தமாக இருக்கிறார். அவரது ஆவி உங்களை நிரப்பும்போது, பயம், வியாதி, ஒடுக்குதலின் எல்லா சங்கிலியும் அறுந்து போகும். உங்கள் இருதயத்தை அவரது வல்லமையாலும், வீட்டை சமாதானத்தாலும் தைரியத்தினாலும் தெய்வீக அதிகாரத்தினாலும் நிரப்புவார்.

### தேவ அருட்கொடையினால் கனம்

**"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" (சங்கீதம் 34:10)**

சீஷர்கள் இராமுழுவதும் பிரயாசப்பட்டும் பலன் கிடைக்கவில்லை (யோவான் 21:5-12). பிறகு இயேசு தோன்றி, "படகின் வலப்புறம் உங்கள் வலையைப் போடுங்கள்" என்று கூறினார். அவர்கள் கீழ்ப்படிந்தபோது, 153 மீன்களைப் பிடித்தார்கள். அற்புதமான அறுவடை! அவர்கள் கரைக்குத் திரும்பியபோது, இயேசு அவர்களுக்கு மீனையும் அப்பத்தையும் ஆயத்தம் பண்ணி வைத்திருந்தார். இரட்சகரின் இரக்கமான பராமரிப்பு. காற்றுக்கும் கடலுக்கும் கட்டளையிடும் கர்த்தர் உங்களுக்கு அன்றன்றுள்ள அப்பத்தையும் ஆயத்தமாக்குகிறார். சாறிபாத் விதவையின் சம்பவத்தை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். பஞ்சகாலத்தில் அவளும் அவள் மகனும் ஒருவேளை புசிக்குமளவுக்கு ஒரு கைப்பிடி மாவும் கொஞ்ச எண்ணெயும் மாத்திரம் இருந்தது. ஆனாலும் தீர்க்கதரிசியாகிய எலியா, சிறிய அடையை முதலில் செய்துகொண்டு வருமாறு கூறினான். தேவன், மாவையும் எண்ணெயையும் குறைய விடமாட்டார் என்று அவன் கூறியபோது, அவள் விசுவாசித்து கீழ்ப்படிந்தாள். தேவனுடைய வார்த்தையை விசுவாசித்த அவள் செயல் அவரை கனப்படுத்துவதாக இருந்தது. அதன்படி அவளுக்கு உணவு குறைவுபடவில்லை. நாளுக்கு நாள் பானையிலிருந்த மாவும் கலசத்திலிருந்த எண்ணெயும் குறைந்துபோகவில்லை. கீழ்ப்படிதல், தெய்வீக அருட்கொடைக்கான வாசலை திறந்தது.

நீங்கள் போராடி பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கலாம்; ஆனாலும் சிறிதளவு பலனே கிடைத்திருக்கலாம். ஆண்டவர், "நீ என்னை நம்பி, கனம் பண்ணியதால், நான் உன் வலையை எங்கே போடுவது என்று காண்பிப்பேன். வேண்டியவை யாவும் உன் குடும்பத்துக்கும் உன் சந்ததி எல்லாவற்றுக்குள்ளும் பாய்ந்து வரும்படி செய்வேன்" என்று கூறுகிறார். அவரது வழிகாட்டுதலுக்கு நீங்கள் கீழ்ப்படியும்போது, உங்கள் முயற்சிகள், நீங்கள் நினைத்துப் பாராதவண்ணம் பலனை கொடுக்கும்; அவரது பரம பண்டசாலையிலிருந்து பூமிக்குரிய ஆதாரங்கள் மூலம் வேண்டியவை புரண்டு வரும்.

கோயம்புத்தூரைச் சேர்ந்த ஜெப கிருபை எஸ்தர் என்ற இளம் சகோதரி, "எங்கள் குடும்பம் பயங்கரமான கடனுக்குள் இருந்தது. கடன்காரர்கள் தினமும் வருவார்கள். சாப்பாடு கிடைப்பதற்கே மிகவும் திண்டாட்டமாக இருந்தது. நான் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது எங்கள் எதிர்காலத்தைக் குறித்து கலங்கினேன். சிறப்பு மாணவர் கூடுகையில் கலந்துகொள்வதற்காக இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்குச் சென்றேன். ஊக்கமாக ஜெபித்தேன். தேவ கிருபையினால் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்றேன். என் அப்பாவுக்கு நல்ல வேலையும் கிடைத்தது. நான் இளம் பங்காளர் திட்டத்தில் இணைந்தேன்; தொடர்ந்து ஜெபித்தேன். கர்த்தர் அற்புதவிதமாக என் கல்லூரி படிப்புக்கு ஊக்கத்தொகை கிடைக்கும்படி அருள்புரிந்தார். பட்டப்படிப்பை முடிக்கும் முன்னரே நல்ல வேலை கிடைத்தது. படிப்பை உயர் சிறப்பு மதிப்பெண்களோடு முடித்தேன். இன்றைக்கு

நாங்கள் பொருளாதாரத்தில் ஸ்திரமான நிலையில் இருக்கிறோம்; எங்கள் தேவைக்கு மிகுதியான ஆசீர்வாதங்கள் இருக்கின்றன. தேவன், வெட்கத்தை கனமாக மாற்றினார்'' என்று கூறுகிறார்கள்.

சாறிபாத் விதவையையும் கடலோரம் சீஷர்களையும் அவர்கள் பிரயாசத்தின் பலனை பெருகச் செய்து போஷித்த ஆண்டவர் இன்றைக்கும் முயற்சிக்கான பலனை கொடுக்கிறார். உங்கள் பணத்தேவைகளை மட்டுமல்ல, இருதயத்தின் ஆழமான விருப்பங்களையும் சந்திக்க அவர் விரும்புகிறார். அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவரை கனம்பண்ணும்போது, குறைவுகள் பரிபூரணமாகவும், தத்தளிப்புகள் சந்தோஷமாகவும் மாறும்.

## தேவனுடைய பரிபூரண ஆசீர்வாதங்களால் கனம்

**''அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்'' (சங்கீதம் 91:14-16)**

அன்பாலும் ஊழியத்தாலும் தேவனை கனம் பண்ணும்போது, எல்லா உபத்திரவங்களிலிருந்தும் உங்களை அவர் விடுவித்து, நீங்கள் நினைக்காத அளவு ஆசீர்வாதங்களை தந்து கனப்படுத்துவார்.

இயேசு, பரத்திற்கு ஏறிப்போக ஆயத்தப்பட்டபோது, தம் கரங்களை உயர்த்தி, சீஷர்களை ஆசீர்வதித்தார் (லூக்கா 24:50). அந்த ஆசீர்வாதம், விடைபெறுவதாக மட்டுமல்ல, இன்றும் ஒவ்வொரு விசுவாசி மேலும் தங்கியிருக்கும் தெய்வீக தயைக்கான அறிவிப்பாக அமைந்தது. ஆண்டவர் உங்களை ஆசீர்வதிக்கும்போது, எந்தச் சூழ்நிலையும் அதை மாற்ற முடியாது.

ஆந்திர பிரதேசத்தை சேர்ந்த சகோதரி ரமணம்மாவுக்கு கிடைத்த தேவ ஆசீர்வாதம் அழகான உதாரணமாக இருக்கிறது. அவர்கள் மகன் ராஜேஷுக்கும் மருமகள் லட்சுமிக்கும் பதினான்கு ஆண்டு கடந்த பிறகும் குழந்தை பாக்கியம் இல்லை. அவர்கள் உள்ளங்கள் வேதனையுற்றன. உறவினர்கள் கேலி செய்தனர். எல்லா சிகிச்சையையும் முயற்சித்துப் பார்த்தனர்; எந்தப் பலனும் இல்லை. இறுதியாக, பெதஸ்தா ஜெப மையத்திற்கு வந்து தங்கள் கண்ணீரை தேவனுக்கு முன்பாக சிந்தினர். ஜெப வீரர்கள் ஊக்கமாக ஜெபித்தனர். விரைவிலேயே ஆண்டவர் நம்பற்கரிய அற்புதத்தைச் செய்தார். லட்சுமி கருத்தரித்து மூன்று பிள்ளைகளை பெற்றெடுத்தார்கள். பிரபு தேவா, பிரபு சைதன்யா, பிரபு சரண் என்று பிள்ளைகளுக்குப் பெயரிட்டனர். தேவனுக்கு நன்றியறிதலாக, பிள்ளைகளின் பிறந்தநாளின்போது இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி நிகழ்ச்சியை தாங்கினார்கள். அவர்கள் வீடு நகைப்பினாலும் சந்தோஷத்தினாலும் நிறைந்திருக்கிறது. தேவன், அவர்கள் துக்கத்தை மூன்று மடங்கு ஆசீர்வாதமாக மாற்றினார்.

அன்பானவர்களே, பரம தகப்பனின் உள்ளம் இப்படியாகவே இருக்கிறது. தம் பிள்ளைகளை பரிபூரணமாக ஆசீர்வதிக்க அவர் மனமுள்ளவராயிருக்கிறார். நீங்கள் முழுமனதுடன் அவருக்கு ஊழியம் செய்யும்போது, அவர் உங்களை உயர்த்துவார்; உங்கள் குடும்பத்தை பாதுகாப்பார்; உங்கள் தலைமுறையை கனப்படுத்துவார். அவர் உங்களைப் பராமரிப்பார். தம் ஆவியை உங்கள் உள்ளத்துக்குள் ஊதுவார். எல்லா தேவைகளையும் அருளிச்செய்வார். அளவின்றி உங்களை ஆசீர்வதிப்பார். ஆகவே, தைரியமாக முன்னேறுங்கள். ஆபிரகாமையும் அவன் சந்ததியையும் கனப்படுத்திய கர்த்தர் உங்களையும் கனப்படுத்துவார். அவரது உண்மைக்கு உங்கள் வாழ்க்கை சாட்சியாக மாறும். ''**ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்**'' (யோவான் 12:26) என்ற வாக்குத்தத்தம் என்றென்றைக்கும் உண்மையாய் நிலைத்திருக்கிறது. நீங்களும் உங்கள் சந்ததியினரும் தேவனுடைய ஆசீர்வாதங்களால் கனம்பெறுவீர்களாக.

**ஜெபம்: அன்புள்ள ஆண்டவரே, உம்முடைய பிள்ளைகளுக்கு உண்மையுள்ள, அன்புள்ள தகப்பனாக நீர் இருக்கிறபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆண்டவரே, உமக்கு ஊழியஞ்செய்கிறவர்களை கனப்படுத்துவதாக நீர் வாக்குப்பண்ணியிருக்கிறீர். ஆகவே, உம் ஆசீர்வாதங்கள் அவர்கள் வாழ்விலும், அவர்கள் பிள்ளைகளின் வாழ்விலும் இனி வரும் சந்ததியின் வாழ்விலும் புரண்டு செல்வதாக. உம்முடைய இரக்கத்தினால் அவர்கள் பாதங்களை கழுவும். உம்முடைய அன்பினால் அவர்களைச் சுத்திகரித்தருளும். உம்முடைய இருதயத்திற்கு நெருக்கமானவர்களாக அவர்களைப் பிடித்துக்கொள்ளும். உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் அவர்களை நிரப்பி, எல்லா தேவைகளையும் சந்தித்து, அநேகருக்கு ஆசீர்வாதத்தை கொண்டு வருகிறவர்களாக அவர்களை மாற்றும். அவர்கள் குடும்பம் உம்முடைய நாமத்திற்கு எப்போதும் மகிமையை கொண்டு வருவதாக என்று இயேசுவின் வல்ல நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.**

**24 X 7 ஜெப உதவிக்கு இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்**

**8546 999 000** (அனைத்து மொழிகளிலும்)

மின்னஞ்சல்: paul@jesuscalls.org

ஜெப கோபுரம் தினமும் காலை 8 முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

குடும்ப பகுதி



# துதிக்கும் இருதயம்

**“கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்: அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்” (சங்கீதம் 34:1)**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

புத்தாண்டை நெருங்கிக்கொண்டிருக்கும் நிலையில் நாம் திரும்பிப் பார்த்தால், வெற்றிகளையும் உபத்திரவங்களையும் காண முடியும். இவை எல்லாவற்றின் மத்தியிலும், துதித்தலை மாத்திரம் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

தாவீது ராஜா, மிகவும் தளர்ந்துபோன தருணத்தில், “கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்” என்று கூறினான். கொண்டாட்டத்திற்குரிய நாட்களில் மட்டுமல்ல, இழப்பு, தனிமை, வேதனை ஆகிய நேரங்களிலும் துதிக்கவேண்டும். அவனது விளக்கம், குறைவற்ற சூழலை அல்ல; நன்றியுள்ள உறுதியான இருதயத்தைக் குறிக்கிறது. அவ்வாறே நாமும், எப்போதாவது அல்ல; தினமும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தும் வாழ்க்கை முறையை பழகிக் கொள்ளவேண்டும்.



ஒரு தருணத்தில் என் இருதயத்தை துக்கம் சூழ்ந்து கொண்டது. என் அன்பு பெற்றோரை நான் இழந்தபோது, துக்கம் என் ஆத்துமாவை மூடுபனிபோல் சூழ்ந்து கொண்டது. நான் அடிக்கடி எனக்குள், “எனக்கு அப்பாவும் இல்லை; அம்மாவும் இல்லை; அண்ணனும் இல்லை” என்று புலம்பினேன். என் நாட்கள் கண்ணீரால் நிரம்பியது. சந்தோஷத்தை தொலைதூரமாக, எட்டாததாக உணர்ந்தேன். ஆனால், ஒருநாள் தேவனுடைய தெய்வீக கருணையால், என் கணவர் கூறிய வார்த்தை எல்லாவற்றையும் மொத்தமாக மாற்றிப்போட்டது. அவர் என்னிடம், “நீ ஏன் இழந்தவற்றைக் குறித்து துக்கித்துக் கொண்டிருக்கிறாய்? இப்போது இருக்கிறவைகளுக்காக ஆண்டவரை ஸ்தோத்திரம் பண்ணு. தோழியரை, ஆசீர்வாதங்களை, உன்னைச் சுற்றியிருக்கும்

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

அன்பினை பார். அவற்றை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்து ஸ்தோத்திரம் பண்ணு” என்று கூறினார். அந்த வார்த்தைகள் என் இருதயத்தைக் குத்தின. அன்றே, என் குறைவுகளை பார்க்காமல், எனக்கு இருக்கிறவைகளைப் பார்க்கும்படி கவனத்தைத் திருப்பினேன். ஒவ்வொரு சிறிய ஆசீர்வாதத்திற்காகவும் சத்தமாக ஆண்டவரை ஸ்தோத்திரிக்க ஆரம்பித்தேன். அப்போது துக்கம் விலகியது; பெலன் நிரப்பியது. புலம்பல் மாறி சந்தோஷம் வந்தது.

சுவிசேஷங்களில் ஏழை விதவை ஒருத்தி, இரண்டு காசுகளை காணிக்கைப் பெட்டியில் போட்டதை கவனித்த அழகான தருணம் ஒன்றை காண்கிறோம். மற்றவர்கள் அதிகம் கொடுத்தாலும், இயேசு, “இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள்” என்றார். ஏன்? அவள் தன்னிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாள் (லூக்கா 21:1-4).

துதித்தல் இதைப்போன்றே இருக்கிறது. கொடுப்பதற்கு உங்களிடம் கொஞ்சமே இருப்பதாக நீங்கள் நினைக்கலாம். சிரமத்தின் வழியாக, வருத்தங்களின் வழியே கடந்து செல்லலாம். ஆனால், கண்ணீரின் மத்தியிலும் நீங்கள் அவரைத் துதிக்கும்போது, அது தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமான சுகந்த வாசனையாயிருக்கும். எவ்வளவு இருக்கிறது என்று நீங்கள் நினைப்பதன் அடிப்படையில் அல்ல; எப்படிப்பட்ட இருதயத்திலிருந்து அது வருகிறது என்பதன் அடிப்படையில் அவர் அதை ஏற்றுக்கொள்கிறார்.

தொடர்ந்து ஸ்தோத்திரித்த வாழ்க்கைக்கு உதாரணமாக ஒருவரைக் காட்டவேண்டுமானால், என் மாமனார் தேவனுடைய அன்பு ஊழியர், மறைந்த சகோதரர் டி.ஜி.எஸ். தினகரனை கூறலாம். கணக்கற்ற சரீரப் பாடுகள், உபத்திரவங்கள், தனிப்பட்ட தியாகங்கள் நடுவிலும், அவர் அனுதினமும் ஆண்டவருக்காக வாழ்வதை தெரிந்தெடுத்தார். தன்னுடைய பெலவீனமோ, மனமடிவோ துதிப்பதை நிறுத்துவதற்கு அவர் அனுமதிக்கவில்லை. 'பரலோக தரிசனங்கள்' போன்ற புத்தகங்களை அவர் எழுதிக்கொண்டிருந்தபோதும், பிரசங்கிக்க உலகமெங்கும் பயணித்தபோதும், பாடுகளின் வழியாக ஊழியம் செய்துகொண்டிருந்தபோதும் அவர் தேவனின் அழைப்புக்கு தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தார். அவருடைய இறுதி நாட்களிலும், வேதனையினூடாக கண்ணீரோடு பிரசங்கித்து ஆண்டவரை துதித்தார். உண்மையான துதியானது முழுவதும் சாதகமான சூழல்களுக்காக காத்திருக்காது என்பதை அவரது வாழ்க்கை நமக்கு நினைவுப்படுத்துகிறது. எல்லா சூழ்நிலைகள்மேலும் அதிகாரமுள்ளவரை அறிந்த இருதயத்திலிருந்து அது எழும்புகிறது.

“ நீங்கள் சந்தோஷத்தை உருவாக்கிக்கொள்ள அவசியமில்லை. வாயை திறந்து துதித்தால் போதும். கர்த்தரின் சந்தோஷம் உங்களை நிரப்பும்

அன்பானவர்களே, ஒருவேளை நீங்களும் நிறைவேறாத நம்பிக்கைகள் அல்லது மௌனமான கவலைகளின் பாரத்தை சுமந்துகொண்டிருக்கலாம் அல்லது “மற்றவர்களுக்கு இருக்கும் ஆசீர்வாதங்கள் எனக்கு இல்லையே” என்று கூறலாம். உங்கள் இருதயம் கனியற்று இருப்பதுபோல் உணரலாம். ஆனால், மறுபடியும் ஏறிட்டுப் பாருங்கள் என்று நான் உங்களை ஊக்கப்படுத்துகிறேன். காணப்படாத இரக்கங்களை, உங்கள் சுவாசம் போன்ற அமைதலான ஆசீர்வாதங்களை, நிற்பதற்கான பெலனை, உங்களை நேசிக்கும் மக்களை, ஒருபோதும் உங்களை விட்டு விலகாத இரட்சகரை நோக்கிப் பாருங்கள்.

யாராவது என்னிடம் வந்து, “மற்றவர்களிடம் இருப்பது என்னிடம் இல்லையே” என்று கூறும்போதெல்லாம், என் இருதயம் அமைதலாக, “ஆண்டவரே, நீர் தந்திருக்கும் அதே ஆசீர்வாதங்களுக்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்” என்று கூறும். ஒவ்வொரு முறையும் நான் ஸ்தோத்திரிக்கும்போது புதிய சந்தோஷம் பிறக்கும்.

நீங்கள் சந்தோஷத்தை உருவாக்கிக்கொள்ள அவசியமில்லை. வாயை திறந்து துதித்தால் போதும். கர்த்தரின் சந்தோஷம் உங்களை நிரப்பும். குடும்பத்தில் துதிக்கும் ஒருவரின் இருதயமானது, குறைகூறுவதிலிருந்து நன்றியால் துதிக்கும்படி வீட்டார் அனைவரையுமே மாற்றக்கூடும். துதிப்பது வீட்டின் வழக்கமாகும்போது, அது சமாதானத்தின், சந்தோஷத்தின், குடும்ப பிணைப்பை வலுப்படுத்தும் ஒருமனதின் சூழ்நிலையை உருவாக்குகிறது.

இந்த ஆண்டு முடிவடைய இருக்கிற தருணத்தில், நாம் குறைகூறுதலை புத்தாண்டுக்குள் கொண்டு செல்லாமல், மாறாக தொடர்ந்து துதிப்போம். “**இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்**” (சங்கீதம் 22:3). நீங்கள் அவரை துதிக்கும்போது, அவரது சமுகம் உங்களைச் சூழ்ந்துகொள்ளும்; அவரது சந்தோஷம் உங்கள் இருதயத்தை நிரப்பும். ஆகவே, அன்பான தேவ பிள்ளையே, உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள். காலையில் அவரை துதியுங்கள்; மாலையில் அவரை ஸ்தோத்திரியுங்கள். ஓராண்டு முடிந்து இன்னோர் ஆண்டு தொடங்கும்போது உங்கள் உதடுகள் அவரது நன்மையைப் பாடுகிறவையாக, உங்கள் ஸ்தோத்திரபலி, பரலோகத்திற்கு எழும்பும் சுகந்த வாசனையாக இருக்கும். கர்த்தர் நமக்கு நல்லவராகவே இருக்கிறபடியால் நாம் இணைந்து அவரை மகிமைப் படுத்துவோம். உங்கள் வாழ்வில் தேவனுடைய ஆசீர்வாதங்கள் பூரணமாய் விளங்குவதாக.

## உங்கள் ஜெப பேழையைக் கட்டுங்கள்: உங்கள் குடும்பத்துக்கான ஆசீர்வாத உடன்படிக்கை

உங்கள் குடும்பம் ஒரு அற்புதத்தை வாஞ்சிக்கிறதா? **வேலை பளுவின் மத்தியில், வாழ்வின் அழுத்தங்கள் மத்தியில், இரவில் தூங்கவிடாமல் செய்யும் கவலைகளின் மத்தியில் அமைதலான தருணங்களில் தேவ சமாதானம் நிறைந்திருக்கும் வீட்டைக் குறித்து, அன்பினால் இணைக்கப்பட்ட, ஜெபத்தினால் பாதுகாக்கப்பட்ட, தெய்வீக தயவில் நடக்கும் குடும்பத்தைக் குறித்து கனவு காண்கிறீர்களா?** அது கனவு அல்ல; உண்மையாகக் கூடும்.

---

### திகைத்து நின்ற ஆராதனாவுக்கு கிடைத்த மலைக்க வைக்கும் ஆசீர்வாதம்

எனக்குத் திருமணமானதும் தேவன் எங்களுக்கு ஒரு மகனைக் கொடுத்து ஆசீர்வதித்தார். விரைவிலேயே என் கணவருக்கு ஆக்ராவுக்கு பணியிட மாறுதல் கிடைத்தது. ஆகவே, வார இறுதியில் மட்டுமே லக்னோ ஜெப கோபுரத்துக்கு எங்களால் வர இயன்றது. குழந்தையை வைத்துக்கொண்டு ஆய்வு படிப்பையும் (PhD) நான் தொடரவேண்டியதாயிற்று. வாழ்க்கையை மிகவும் கடினமாக உணர்ந்தேன். என் அப்பா சிலவேளைகளில் உதவி செய்தாலும், பல நேரங்களில் பாரமாகவும் தனிமையாகவும் உணர்ந்தேன். அப்படிப்பட்ட வேளையில் என் குடும்பத்தை குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் இணைத்தேன். அற்புதவிதமாக தேவன் என் குடும்பத்திற்காக ஏறெடுக்கப்பட்ட எல்லா பிரார்த்தனைகளையும் கேட்டு என் கணவருக்கு லக்னோவிலேயே நல்ல வேலை கிடைக்கவும் அவர் வீடு திரும்பவும் கிருபை செய்தார். தேவனுடைய கிருபையால் நான் ஆய்வுப் படிப்பை (PhD) நிறைவு செய்யவும் முதுமுனைவர் படிப்புக்கான (postdoctoral) உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ளவும் முடிந்தது. ஐந்து வருடங்கள் கழித்து நாங்கள் இன்னொரு குழந்தையை பெற்றுக்கொள்ள ஏங்கினோம். இரண்டு மாதங்களுக்குள்ளாக கருத்தரிக்காவிட்டால், கரு முட்டையின் எண்ணிக்கை எனக்குக் குறைவாக இருந்ததாலும் செயற்கை கருத்தரித்தல் முறைக்கு (IVF) மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். என் உள்ளம் கவலையில் மூழ்கியது. குடும்ப ஆசீர்வாத கூட்டத்தில் தேவன் அற்புதம் செய்தார். நான் இயல்பாகவே கருத்தரித்தேன். என் மகன், தங்கைக்காக ஜெபித்துக்கொண்டே இருந்தான். ஆண்டவர் அந்த ஜெபத்திற்குப் பதிலளித்து எங்களுக்கு அழகான பெண் குழந்தையைக் கொடுத்தார். இன்றைக்கு நாங்கள் பூரண ஆசீர்வாதம் பெற்ற குடும்பமாக களிகூருகிறோம். எல்லா மகிமையும் தேவனுக்கே செலுத்துகிறோம்.

– ஆராதனா ரோஹித், லக்னோ.



### உங்கள் குடும்பமும் எதிர்பார்த்திருக்கும் அற்புதத்தைப் பெறும்

நோவாவின் கீழ்ப்படிதலை தேவன் நினைவு கூர்ந்து அவன் வீட்டார் அனைவரையும் இரட்சித்து ஆசீர்வதித்தார். அதேபோன்று உங்கள் குடும்பத்தையும் பாதுகாத்து, வேண்டியவற்றை அருளிச் செய்ய காத்திருக்கிறார். நிச்சயமற்ற இந்த உலகில் உங்கள் குடும்பம் தனியாகவே போராட்டங்களை எதிர்கொள்ள தேவையில்லை. இயேசு அழைக்கிறார் குடும்ப ஆசீர்வாத திட்டம் புனிதமான உடன் படிக்கையாயிருக்கிறது.




**குடும்ப ஆசீர்வாத திட்டம்**

குடும்பங்களுக்கு ஜெப பாதுகாப்பு

### உங்கள் வீட்டைப் பாதுகாப்பதற்கான ஜெபத்திற்கு பதில்

பெற்றோராக, வாழ்க்கை துணையாக, பாதுகாவலராக ஆசீர்வாதத்தின் சுதந்தரத்தை பெற்றுக்கொள்ள வாய்ப்பு. நீங்கள் பதிவு செய்யும்போது,

- **தினசரி ஜெபம்:** உங்கள் குடும்பத்திற்காக அனுதினமும் ஜெபம் ஏறெடுக்கப்படும்
- **திருமண நாள் ஆசீர்வாதம்:** உங்கள் திருமண நாளின்போது தொலைபேசி மூலம் விசேஷித்த அழைப்பு
- **வாக்குத்தத்த சான்றிதழ்:** உங்கள் நன்கொடை ரூ.5,000 அடையும்போது தேவ வசனம் அடங்கிய சான்றிதழை பெறுவீர்கள்.

**இன்றே உங்கள் குடும்பத்தை இணைத்திடுங்கள்; உங்கள் அற்புதத்திற்குள் அடியெடுத்து வையுங்கள்**

ஜெப பாதுகாப்பு இல்லாமல் ஒரு நாளையும் கடக்கவேண்டாம். உங்கள் மாதாந்திர பொருத்தனையை தெரிந்தெடுங்கள்; போராட்டங்களை சாட்சியாக மாற்றுங்கள்.

**மாதந்தோறும் ரூ.300/- மாதந்தோறும் ரூ.500/- மாதந்தோறும் ரூ.1,000/- மாதந்தோறும் ரூ.5,000/-**

மேலும் விவரங்களை அறியவும், பதிவு செய்யவும்
www.jesuscalls.org/donate/fbp என்ற இணைய பக்கத்தை பாருங்கள்
தொலைபேசி: 044 23456677 (காலை 8 முதல் இரவு 8 மணி வரை மட்டும்)
இப்போதே இணைந்திடுங்கள்; உங்கள் தத்தளிப்புகளை தேவன் பெரிய வெற்றியாக மாற்றுவதை காணுங்கள்
உங்கள் காணிக்கைகளை எளிதான வழிகளில் அனுப்பும் வழிமுறைகளை இந்த இதழின் 19ம் பக்கத்தில் காணுங்கள்.

DONATE TO FBP

# பெதஸ்தா ஜெப மையத்தின் 32வது ஆண்டு விழா







பெதஸ்தா ஜெப மையத்தின் 32வது ஆண்டுவிழா நடைபெற்றது. இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் கூடி வந்தனர். Dr. பால் தினகரனும் சகோ. சாமுவேல் தினகரனும் மக்களை தீர்க்கதரிசன அறிவிப்புகளுக்குள் நடத்தி, பெதஸ்தாவை குறித்த ஆவிக்குரிய தரிசனத்தை பகிர்ந்துகொண்டனர். Dr. பால் தினகரன், ஏசாயா 66ம் அதிகாரத்திலிருந்து தேவ சமாதானம் ஒரு நதியைப்போல பெதஸ்தாவில் பாய்ந்து வரும் என்றும், அது குடும்பங்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும், தேசத்திற்கும் க்ஷேமத்தையும், செழிப்பையும், தெய்வீக ஆறுதலையும் கொண்டு வருமென்றும் கூறினார். தேவ ராஜ்யத்திற்கென்று பிரகாசிக்கும்படி எல்லா விசுவாசிகளையும் ஊழியப் பங்காளர்களையும் தேவன் பரிசுத்தப்படுத்துவார் என்றும், அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மேல் தேவ மகிமை விளங்கும் என்று கூறினார். சீர்ப்படுத்தும், தடையை உடைக்கும் வாக்குத்தத்தங்கள், தேவ வல்லமையின் வெளிப்பாடுகள் அடங்கியதாக அமைந்த செய்தி உள்ளங்களுக்கு ஆறுதல் அளித்தது.

Dr. பால் தினகரனும் சகோ. சாமுவேல் தினகரனும், இரண்டு பகுதிகளில் ஜெபத்துடன் தேவனுடைய அசைவாடுதலை அறிமுகம் செய்தனர். முதலாவது பெதஸ்தா ஜெப நகரம். இயேசு செய்த அற்புதங்களின் காட்சிகள், தேவ ஊழியர்களின் வாழ்க்கை, 24 மணி நேர ஆராதனை, 24 மணி நேர ஜெபம், முகாம் மையம் இன்னும் பல இதில் அடங்கியிருக்கும். இரண்டாவது, அப்போஸ்தலர் 2:17; ஆகாய் 2:9ல் கூறியுள்ளபடி தீர்க்கதரிசனம் உரைக்கும் குமாரரையும் குமாரத்திகளையும் எழுப்பும் தேவ அசைவாடுதல். பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப் பெற்று, தீர்க்கதரிசன அபிஷேகத்தால் அற்புதங்களைச் செய்யும், தேவ ஜனங்களை குணப்படுத்தும் வல்லமையுடன் ஜெபித்து, ஆராதித்து, தீர்க்கதரிசனம் உரைத்து பிரசங்கிக்கும் தீர்க்கதரிசிகளை, ஜெப வீரர்களை, வாலிபர்களை தேவன் எழுப்புகிறார் என்று சகோ. சாமுவேல் தினகரன் அறிவித்தார். தேவனுடைய இந்த அசைவாடுதலால், இந்த ஸ்தலம் தேசங்களை, ராஜாக்களை, தேவனுடைய அற்புதங்களுக்கு சாட்சியான மக்களை ஈர்க்கும் என்பது உறுதியானது.

இந்த ஆண்டுவிழா கூட்டம், கடந்த கால ஆசீர்வாதங்களைக் காட்டுவதாக மட்டுமின்றி, எதிர்காலத்தில் நடக்க இருக்கும் ஆவிக்குரிய மறுரூபத்திற்கும் உலகளாவிய மாற்றத்திற்கும் ஆரம்பப் புள்ளியாகவும் அமைந்தது.




ஊழியத்தில் என் அன்பு பங்காளரே,

விசுவாசத்தில் இணைந்து தொடர்ந்து நடக்கும் நாம், தேவனுடைய தெய்வீக ஊழியத்தை செய்யும்போது, "**பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்**" (லூக்கா 1:35) என்ற மகிமையான வாக்குத்தத்தத்தை நினைவுகூருவோம். தம்முடைய தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மரியாளை பெலப்படுத்தியதுபோன்றே தேவ ஆவியானவர், தேவன் நமக்குக் கொடுத்துள்ள அழைப்பை செய்து முடிக்கும்படி நம்மை அபிஷேகித்து பெலப்படுத்துவாராக. உங்கள் உண்மையுள்ள ஜெபங்களும், அன்பும், ஆதரவும் தேவ சமுகம் உங்கள் மூலமாக செயலாற்றுகிறது என்பதற்கு வல்லமையான சாட்சியாக இருக்கின்றன. நீங்கள் விதைக்கும் ஒவ்வொரு விதையும், நீங்கள் வேண்டுதல் செய்யும் ஒவ்வொரு தருணமும், நீங்கள் அன்புடன் செய்யும் ஒவ்வொரு கிரியையும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரம்பியதாக அமைந்து, கணக்கற்றோர் வாழ்வில் நம்பிக்கையையும் மறுரூபத்தையும் கொண்டு வருவதாக.

மரியாளின்மேல் நிழலிட்ட அதே தேவன், தொடர்ந்து தம் வல்லமையால் உங்கள்மேல் தமது தயையாலும் வழிநடத்துதலாலும் பெலத்தாலும் நிழலிடுவாராக. அவரது சமுகம் உங்களை புதுஜீவனால் நிரப்பி, புதிய தரிசனத்தை

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...



தந்து, உங்கள் மூலம் அவரது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதாக. இந்த பரிசுத்த அழைப்பில் எங்களோடு நிற்பதற்காக உங்களுக்கு நன்றி. ஆவியினால் பெலப்படுத்தப்பட்டு நாம் இணைந்து முன்னேறி, நம் தலைமுறையில் தேவ வல்லமை வெளிப்படுவதை காண்போம்.

## துதி குறிப்புகள்

கடந்த மாதத்தில், தேவன் ஊழியத்தின் மூலம் செய்தவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பு கிறேன்; நாம் இணைந்து அவருடைய நாமத்தை உயர்த்த அது வழிவகுக்கும்.

ஜெபத்தின் மூலமாகவும் வெளியிட கூட்டங்கள் மூலமாகவும் தேவ கரம் ஊழியத்தில் வல்லமையாக செயல்பட்டு கணக்கற்ற மக்களின் வாழ்க்கையைத் தொட்டதற்காக தேவனை துதிக்கிறேன்.

ஜெப கோபுரங்களின் வாயிலாக 1,36,020 பேர் வேண்டுதலின் வல்லமையை அனுபவித்துள்ளனர். தொலைபேசி ஜெப கோபுரத்தை தொடர்புகொண்ட 4,02,833 பேர் ஆறுதலையும் அற்புதங்களையும் அனுபவித்துள்ளனர். பதிவு செய்யப்பட்ட பிரார்த்தனைகள் (Dial-A-Prayer) மூலமாக 12,621 பேரும், சமூக ஊடகங்கள் மூலமாக புதிதாக 4,70,441 பேரும், மின் பத்திரிகை வாயிலாக (E-magazines) 1.5 லட்சம் பேரும் தொடப்பட்டுள்ளனர். 23,070க்கும் அதிகமான கடிதங்களுக்கும் 31,014 மின்னஞ்சல்களுக்கும் ஜெபத்துடன் தேவ அன்பு மற்றும் வாக்குத்தத்தங்களுடன் பதிலும் அனுப்பப்பட்டுள்ளன. 62 வெளியிட கூட்டங்கள் மூலம் ஆண்டவர் வல்லமையாக அசைவாடி 2,125 பேரை ஆசீர்வதித்துள்ளார். வாராந்திர உபவாச கூட்டங்களில் பங்குபெற்ற 19,004 பேருக்கு உணவு வழங்கப்பட்டது. குடும்ப தொடரில் பிள்ளைகளே ஆசீர்வாதம் என்ற நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 15 லட்சத்துக்கும் மேற்பட்ட முறை அது பார்க்கப்பட்டுள்ளது. மக்களுக்கு அது எப்படி ஆசீர்வாதம் அளித்தது என்பது குறித்து கணக்கற்ற சாட்சிகள் வருகின்றன. உங்கள் ஆதரவாலும் ஜெபத்தாலும் தொடப்படும் ஆத்துமாக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருப்பதால் தேவ நாமம் மகிமைப்படுகிறது.

2025 அக்டோபர் 10ம் தேதி பெதஸ்தா மையத்தின் 32வது ஆண்டுவிழாவை ஆவிக்குரியவிதத்தில் கொண்டாடினோம். இந்தியா முழுவதிலுமிருந்து நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். கர்த்தர், தம்முடைய சமாதானமும் மகிமையும் ஆறுதலும் பெதஸ்தாவில் பாய்ந்து வரும் என்றும், குடும்பங்களையும் தேசங்களையும் அது

மறுரூபமாக்கும் என்றும் கூறி, எனக்கு ஏசாயா 66ம் அதிகாரத்திலிருந்து ஒரு தீர்க்கதரிசன வார்த்தையைக் கொடுத்தார். அதை நான் தேவ மகிமைக்கென்று அக்கூட்டத்தில் பகிர்ந்துகொண்டேன். என் மகன் சாமுவேல் பெதஸ்தாவின் எதிர்காலம் குறித்து வல்லமையான தரிசனத்தை பகிர்ந்துகொண்டான். நாங்கள் இருவரும் வந்திருந்த அனைவரும் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளும்படி தனித்தனியே ஜெபித்து, பெதஸ்தா 24X7 மணி நேரமும் ஆராதனையின் எழுப்புதல் மையமாக செயல்படுவதை உறுதி செய்தோம்.

> ‘‘ குடும்பம் தொடரில், புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பிள்ளைகளே ஆசீர்வாதம் என்ற புதிய நிகழ்ச்சி, எல்லா தளங்களிலும் சேர்த்து 15 லட்சம் முறை பார்க்கப்பட்டுள்ளது; மனங்களைத் தொட்டுள்ளது

அதே நாளில், என் தாயார் சகோதரி ஸ்டெல்லா தினகரன், சென்னையில் நடந்த கூட்டத்தில், என் தந்தையை ஆண்டவர் அபிஷேகித்ததை நினைவுகூர்ந்தார்கள். லேவியராகமம் 26:11 வசனத்திலிருந்து அவர்கள், தேவன் அபிஷேகத்தின் வாயிலாக விசுவாசிகள் மத்தியில் வாசம்பண்ணுகிறார் என்று ஊக்கமான செய்தியளித்து, ஜெபித்தார்கள். அவர்கள் மனதுருக்கத்தோடு குடும்பங்களுக்காக ஜெபித்து ஆசீர்வதித்தார்கள். தேசம் முழுவதும் 104 ஜெப கோபுரங்களிலும் அதே வேளையில் நடைபெற்ற அபிஷேக கூட்டங்கள் வாயிலாக ஆண்டவரின் நாமம் மகிமைப்பட்டது.

### ஜெபக் குறிப்புகள்

டிசம்பர் மாதத்தில் இதுவரை இல்லாதவண்ணம் ஜெப கோபுரங்கள் வாயிலாக 2,50,000 மக்களையும், தொலைபேசி ஜெப கோபுரம் வாயிலாக 10,00,000 அழைப்புகளையும், தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகம் மூலம் 2 கோடி பேரையும், கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல் வாயிலாக 1 லட்சம் பேரையும், பத்திரிகை மூலம் 2 லட்சம் குடும்பங்களையும் சந்திக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். இந்த முயற்சிகள் ஒவ்வொன்றும் பூரண பலனை கொடுக்கவும், கணக்கற்ற ஆத்துமாக்களை மறுரூபமாக்கவும் ஜெபியுங்கள்.

### ஃபேமிலி சேனலில் புதிய நிகழ்ச்சிகள்

**‘‘அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்’’ (ஏசாயா 55:11)**

ஃபேமிலி சேனலில் அனைத்து வயதினரையும் ஊக்குவித்து, பயிற்றுவித்து, உயர்த்தக்கூடிய விசேஷித்த புதிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாக உள்ளன என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.

**போஜனம்** - ஊக்கமான செய்திகள் மூலமாக ஆவிக்குரிய பெலனை அளிக்கும் புதிய பகுதிகள்

**குறும்படங்கள்** - விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் புதிய பகுதிகள் மற்றும் வேதாகம கேள்வி பதில் போட்டி

**அசைவூட்டப்பட்ட கார்ட்டூன் கதைகள்** - சிறுவர்களுக்கான வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட வேடிக்கையான கதைகள்

**இயேசுவுடன் குட்டீஸ்** - சிறு பிள்ளைகள் விசுவாசத்தில் வளரவும் இயேசுவுடன் சிநேகிதம் பாராட்டவும் உதவும் மகிழ்ச்சியான நிகழ்ச்சி

**வேதாகம பெண்கள்** - வேதாகம பெண்கள், அவர்கள் செய்த செயல்கள் குறித்த வல்லமையான நிகழ்ச்சி

**சகோதரி இவாஞ்சலினுடன் பிரார்த்தனை** - தேவ வாக்குத்தத்தத்தினால் குடும்பங்களை உயர்த்தும் ஊக்கமான ஜெபங்கள்.

**கர்த்தரின் செயல்** - தேவனுடைய வல்லமையான செயல்களை பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சி. இப்போது ஹிந்தியிலும் வெளியாகிறது.

**சகோதரி இவாஞ்சலினுடன் வேத பாடம்** - கிறிஸ்துவுடன் உங்கள் வாழ்க்கையை உறுதிப்படுத்தும் போதனை

**நான் என்ன செய்யவேண்டும்?** - நடைமுறை பிரச்னைகளை வேதாகம ஞானத்துடன் சந்திக்க உதவும் கேள்வி - பதில் பகுதி.

**நீங்கள் தனிமையில் இல்லை** - அன்றாட பிரச்னைகளுக்கு வேதத்தின் அடிப்படையிலான ஆறுதலும் நம்பிக்கையும் தரும் நிகழ்ச்சி

**சாமுவேல் தினகரன் வழங்கும்** Podcast - தலைமைத்துவம், வேலை, விசுவாசத்தில் ஆழமான பதில்களை அளிக்கும் நிகழ்ச்சி

**சமயத்திற்கேற்ற வார்த்தை** - சுகம், விடுதலை, புதிய பாதையை தரும் தீர்க்கதரிசன செய்திகள்

ஃபேமிலி சேனலை பாருங்கள்; ஒவ்வொருவர் உள்ளத்திலும் பேசும் ஆவிக்குரிய செய்திகளை கேளுங்கள்.

### இஸ்ரேல் ஜெப கோபுரத்திலிருந்து உலகத்திற்காக ஜெபிக்க எக்காளத்தை ஊதுதல்

**‘‘என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு’’ (ஏசாயா 56:7)**

உலக நாடுகளுக்காக தீர்க்கதரிசன வேண்டுதலை இரவும் பகலும் ஏறெடுக்கும் இஸ்ரேல் ஜெப கோபுரம் பிரகாசமான ஒளியாக திகழ்கிறது. கடந்த ஆண்டில் பன்னிரண்டுக்கும் அதிகமான தேசங்களிலிருந்து விசுவாசிகள் இந்தப் புனித ஸ்தலத்திற்கு வந்து தெய்வீக வெளிப்பாடுகளை அடைந்து, தங்கள் தாய்நாட்டிற்கு தேவனின் தீர்க்கதரிசன குரலை கொண்டு சென்றிருக்கின்றனர். இந்த முக்கியமான நேரத்தில் நாம் தொடர்ந்து தேவனின் சிங்காசனத்தின் முன்பு தேசங்களுக்காக ஜெபிப்போம். இந்த தீர்க்கதரிசன இயக்கத்தில் இணைந்துகொள்ளும்படி ஆண்டவர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாரானால் இஸ்ரேல் ஜெப கோபுரத்திற்குச் சென்று தேசங்களுக்காக திறப்பில் நிற்கும்படி உங்களை அன்போடு அழைக்கிறேன். info@israelprayertower.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளுங்கள்.

### குடும்ப ஆசீர்வாத திட்டத்தின் மூலம் வீட்டில் அற்புதங்கள்

**‘‘கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா’’ (சங்கீதம் 127:1)**

இத்திட்டத்தில் இணைந்ததின் மூலம் கோயம்புத்தூரை சேர்ந்த திருமதி அனிதாவின் கணவருடைய வேலை நிரந்தரமானது. அத்துடன் அவருக்கு மதுவிலிருந்து பூரண விடுதலையும் கிடைத்தது. வீட்டில் சந்தோஷமும் ஒருமனமும் திரும்ப கிடைத்தது. உங்கள் குடும்பமும் தேவனுடைய நித்திய ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாம். இயேசு அழைக்கிறார் குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் இணையும்போது ஜெப கோபுரங்களில் அர்ப்பணிப்புள்ள ஜெப வீரர்கள் உங்கள் குடும்பத்துக்காக ஜெபிப்பார்கள். கணக்கற்ற குடும்பங்கள் தேவனுடைய அற்புத வல்லமையையும் நீங்காத சமாதானத்தையும் அனுபவித்துள்ளன. குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் உங்கள் குடும்பத்தை இணைப்பதன் மூலம், உங்கள் வீட்டாரை ஜெபத்தோடும் தெய்வீக தயவோடும் இணைக்கிறீர்கள். இன்றே இணைந்திடுங்கள். தேவ சமுகம் உங்கள் வீட்டை ஆசீர்வாதங்களாலும், தடைகள் மத்தியில் வழிகளாலும், புத்திக்கெட்டாத சமாதானத்தாலும் நிரப்புவார்.

### சீஷாவின் மூலம் பயிற்சி முதல் ஊதியம் வரை

**"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 25:40)**

காவல்கிணறு என்ற ஊரைச் சேர்ந்த P.A. ராக்லாண்ட் என்ற இளைஞர், கல்லூரி படிப்பை முடித்த பிறகு, தொழிற்பயிற்சி இல்லாத காரணத்தால் வேலை கிடைக்காமல் தவித்தார். சென்னையில் சீஷா நடத்தும் Tally ERP பயிற்சியில், கணக்கியல், மைக்ரோசாஃப்ட் ஆபீஸ் மற்றும் டிஜிட்டல் திறமைகளை பயின்றார். சீஷாவின் உதவியுடன் ஒரு நிறுவனத்தில் உதவி கணக்காளராக மாதம் ரூ.15,000/- ஊதியத்திற்கு பணியில் சேர்ந்துள்ளார். கணக்கற்ற சமுதாய சேவைகள் மூலமாக சீஷா, மக்கள் வாழ்க்கையை மாற்றுகிறது என்பதற்கு இது ஒரு சாட்சியாகும். நலிவுற்ற மக்களை கல்வி, திறன்பயிற்சி, உடல் நல பராமரிப்பு மற்றும் மனதுருக்கத்தின் மூலம் சீஷா தகுதிப்படுத்துகிறது. ஆண்டுதோறும் பண்டிகை காலத்தில், விளிம்பு நிலையிலுள்ள சமுதாயத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகள் 'கொடுத்தலே சந்தோஷம்' திட்டத்தின் மூலம் புத்தாடைகளை வெகுமதியாக பெறுகின்றனர். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சீஷா செய்யும் ஊழியத்திற்காக தேவனை ஸ்தோத்திரிப்பதோடு, இந்த ஆண்டு இன்னும் அநேகர் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம். இந்த இதழின் 19வது பக்கத்தில் நன்கொடை விவரங்களை காணலாம்.

### குழந்தைகளைக் கொண்டாடுவோம்

**"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்" (மாற்கு 10:14)**

2025 நவம்பர் 14ம் தேதி, குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நம் ஜெப கோபுரங்களிலெல்லாம் குழந்தைகளுக்கான விசேஷித்த ஜெப நாளாக அனுசரிக்கப்படும். நம் அருமை பிள்ளைகள் தேவன் அளித்த ஈவுகள். அன்று சந்தோஷமான கொண்டாட்டங்கள், ஆர்வத்தைத் தூண்டும் போட்டிகள், உள்ளமுருக்கும் ஜெபம் ஆகியவை நடைபெறும். உங்களுக்கு அருகில் அமைந்துள்ள ஜெப கோபுரத்தில் இந்தச் சிறப்பு நிகழ்வில் பங்குபெறுமாறு உங்கள் பிள்ளைகளை ஊக்கப்படுத்துங்கள். நாம் இணைந்து தேவனுடைய பெரிய திட்டங்களுக்காக அவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர் என்ற விசுவாசத்தோடு அவர்கள் எதிர்காலத்திற்காக ஜெபிப்போம்.

### இவற்றுக்காகவும் ஜெபியுங்கள்

என் அன்பு தங்கை மறைந்த ஏஞ்சல் தினகரனின் பிறந்தநாளை நவம்பர் 4ம் தேதி நாங்கள் நினைவுகூருவதால் எங்கள் குடும்பத்தை ஜெபத்தில் தாங்குங்கள். காருண்யா பல்கலைக்கழகம் மூலம் கிடைக்கும் ஆசீர்வாதங்களால் அவளது ஜீவன் தொடர்ந்து கனி கொடுத்து வருகிறது.

1980 நவம்பர் 20, ஆண்டவர் என்னை தம்முடைய பரிசுத்த ஆவியால் அபிஷேகித்த நாள். அந்தத் தருணத்திலிருந்து என் வாழ்க்கை முற்றிலுமாய் மாறியது. அன்றிலிருந்து அவரது ஆவியானவர் எனக்கு வழிகாட்டியாக, தேற்றுகிறவராக, ஞானத்தை அளிப்பவராக, ஊழியத்தை, பல்கலைக்கழகத்தை, குடும்பத்தை நடத்துகிறதற்கு பெலப்படுத்துகிறவராக இருந்து வருகிறார். ஜெப கோபுரங்களில் வாரந்தோறும் நடக்கும் அபிஷேக கூட்டங்களின் மூலம் தேவனுடைய அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளவும், பரிசுத்த ஆவியானவரின் மறுரூபமாக்கும் வல்லமையை அனுபவிக்கவும் உங்களை அழைக்கிறேன்.

### நடக்க இருக்கிற கூட்டங்களை உங்கள் ஜெபங்களில் தாங்குங்கள்

**2025 நவம்பர் 2 – ஞாயிறு ஆசீர்வாத கூட்டம், சென்னை**
**2025 நவம்பர் 8 – பெண்கள் ஆசீர்வாத கூட்டம், வானகரம்**
**2025 நவம்பர் 8, 9 – இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழா, ரோயிங், அருணாச்சல பிரதேசம்**
**2025 டிசம்பர் 25 – கிறிஸ்துமஸ் கூட்டம், Dr. டி.ஜி.எஸ். தினகரன் ஜெப கோபுரம், சென்னை**
**2026 ஜனவரி 3 – வாலிபர் திருவிழா, சென்னை**
**2026 ஜனவரி 4 – புத்தாண்டு ஆசீர்வாத கூட்டம், சென்னை**
**2026 பிப்ரவரி 1 – மாணவர் பிரார்த்தனை கூட்டம்**

இந்தக் கூட்டங்களுக்கு வாருங்கள்; நாம் இணைந்து ஆண்டவரை ஆராதித்து அவரது பரிபூரண ஜீவனை பெற்றுக்கொள்வோம்.

2025 அக்டோபர் 10ம் தேதி என் மகள் ஸ்டெல்லா ரமோலாவுக்கும் மருமகன் டேனியல் டேவிட்சனுக்கும் கிருபையாக பெத்தானி அட்ரியேல் டேவிட்சன் என்ற பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்ததற்காக தேவனை துதிக்கிறேன். 1962ம் ஆண்டு அதே தினத்தில் தான் என் தந்தை இயேசுவை முகமுகமாய் தரிசித்தார். தேவன் எங்கள் வாழ்வில் கூடுதலாகக் கொடுத்த இந்தப் புதிய ஆசீர்வாதத்திற்காக அவரை ஸ்தோத்திரிப்பதோடு, எங்களுக்காக ஜெபிக்கிற உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

வேதம், **"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது"** (1 தெச. 5:18) என்று நினைவுப்படுத்துவதுபோல, நமக்கு ஊழியம் செய்வதற்கு கிடைக்கும் ஒவ்வொரு தருணத்திலும் நன்றியோடு தேவனை ஸ்தோத்திரிப்போம். ஆண்டவர்தாமே உங்களை தொடர்ந்து பூரணமாய் ஆசீர்வதித்து, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் விளங்கச் செய்வாராக.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் சகோதரன்,

Dr. பால் தினகரன்.



### அமிர்தசரஸை பற்றி...

பஞ்சாப்பின் முக்கிய பகுதியான அமிர்தசரஸில் பல்வேறு பின்னணியை சேர்ந்த 24,90,656 மக்கள் வசிக்கின்றனர். வளர்ந்து வரும் இந்தப் பண்பாட்டின் பின்னே பல தனிப்பட்ட வாழ்க்கைப் போராட்டங்கள் இருக்கின்றன. அமிர்தசரஸ் ஜெப கோபுரத்திற்கு வரும் ஜெப விண்ணப்பங்கள், பணக்கஷ்டம், உடல்நல குறைபாடுகள், சொந்த வீட்டுக்கான ஆசை, கடனிலிருந்து விடுதலை, வேலை, குழந்தை பாக்கியம் ஆகிய உண்மையான தேவைகளை காட்டுகின்றன. இந்த சவால்கள் மத்தியிலும் ஜெப கோபுரம், விசுவாசத்தின், ஆறுதலின், நம்பிக்கையின், தெய்வீக பதில்களின் ஸ்தலமாக உள்ளது.

# அமிர்தசரஸ் மக்களுடன் தேவனுடைய அன்பை பகிர்ந்துகொள்வோம்



"என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங்கீதம் 2:8)

மக்களின் வாழ்க்கையை பிரார்த்தனையின் மூலமாக மறுரூபமாக்கும் நம்பிக்கையின் ஸ்தலங்களாக இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் விளங்குகின்றன. நாள்தோறும் தேவனுடைய வல்ல கரம், குணப்படுத்துவதையும், அற்புதங்களைச் செய்வதையும், தடைகளை உடைப்பதையும் இந்த ஜெப கோபுரங்களில் காண்கிறோம்.



### வல்லமையான ஒரு சாட்சி - தோல்வியிலிருந்து வெற்றிக்கு

நான் இயேசு அழைக்கிறார் பங்காளர். நான் பல் மருத்துவ தேர்வில் BDS தோல்வியுற்ற போது மிகவும் ஏமாற்றமடைந்தேன். மிகுந்த தவிப்பின் மத்தியில் அமிர்தசரஸ் ஜெப கோபுரத்திற்கு சென்றேன். ஜெப வீரர்கள், தேவனுடைய இரக்கத்தின்மேல் நம்பிக்கை வைத்து எனக்காக ஊக்கமாக ஜெபித்தனர். என்னுடைய விடைத்தாள்களை மறுபடியும் பரிசீலித்தபோது, பல விடைகள் திருத்தப்படாதது கண்டுபிடிக்கப்பட்டது. நான் தேர்ச்சி பெற்றேன். தற்போது BDS படிப்பை வெற்றிகரமாக முடித்து, இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் என் வாழ்வை மாற்றியுள்ளதோடு எதிர்காலத்தையும் மீட்டெடுத்துள்ளது என்று சந்தோஷமாக சாட்சி கூறுகிறேன். - ருச்சிகா, அமிர்தசரஸ்.

**தேவை**

அமிர்தசரஸில் வாழும் 24,90,656 மக்களின் பெருகி வரும் ஆவிக்குரிய பசியை ஆற்றுவதற்காக ஜெபம், தன்னார்வ ஊழியம், உதாரத்துவமான காணிக்கை ஆகிய ஆதரவை உங்களிடமிருந்து அமிர்தசரஸ் ஜெப கோபுரம் எதிர்பார்க்கிறது. பஞ்சாப்பில் எழுப்புதலை கொண்டு வரும் ஜெப ஸ்தலமாக விளங்கும்படி அமிர்தசரஸ் ஜெப கோபுரத்துக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**தன்னார்வலர்கள் தேவை**

மாதந்தோறும் ஜெப வீரர்களாக, வாலிப ஊழிய தலைவர்களாக, ஸ்தானாபதிகளாக, நற்செய்தியாளர்களாக Ajnala,FatehgarhChurian, Batala, Raiya மற்றும் Jandiala ஆகிய மாவட்டங்களில் ஊழியம் செய்ய மாதந்தோறும் 50 தன்னார்வ ஊழியர்களை ஜெபத்துடன் நாடுகிறோம்.

"உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்" (சங்கீதம் 110:3)

---

**கொடுப்பதற்கான வழிகள்**

அமிர்சரஸுக்கு தேவனுடைய அன்பை பகிர்ந்துகொள்வதில் எங்களோடு இணைந்துகொள்ளுங்கள்

- ☐ 1 ஆத்துமாவை தொடுவதற்கு ரூ.1,000/-
- ☐ 100 ஆத்துமாக்களை தொடுவதற்கு ரூ.1,00,000/-
- ☐ 1000 ஆத்துமாக்களை தொடுவதற்கு ரூ.10,00,000/-

அல்லது ஆண்டவர் உங்களை வழிநடத்துகிறபடி கொடுங்கள்.

**அமிர்தசரஸ் ஜெப கோபுரம்**

தொடர்புக்கு: 9517725640, 6380752227 மின்னஞ்சல்: boamritsar@jesuscalls.org
இணையதளம்: www.jesuscalls.org

DONATE TO AMRITSAR PRAYER TOWER

### இணைந்து எழுப்புதலை கொண்டு வருவோம்

இந்தியாவுக்காக ஜெபிப்போம் ஊழியத்தின் (Pray for India Mission) ஒரு பகுதியாக விசுவாசத்தோடு இணைந்து அமிர்தசரஸ் நகருக்காக ஜெபிப்போம். அந்நகரம் தேவ மகிமையால் நிரப்பப்படவேண்டும்; ஒவ்வொரு இதயமும் தேவனுடைய மறுரூபமாக்கும் அன்பை அனுபவிக்கவேண்டும்.

வாலிபர் பகுதி



# தகப்பனின் பராமரிப்பில்...

என் அன்பு இளம் நண்பனே, நவம்பர் மாதத்திற்குள் உங்களை வரவேற்கிறேன். ஒவ்வொரு புதிய மாதமும் தேவனிடமிருந்து புதிய வாக்குத்தத்தத்தைக் கொண்டு வருகிறது. இந்த நவம்பர் மாதமும், நீங்கள் தகப்பனின் பராமரிப்பில் இருக்கிறீர்கள் என்ற நிச்சயத்தை நமக்குத் தருகிறது.

இதைக் குறித்து ஒருகணம் யோசித்துப் பாருங்கள். அவரது பராமரிப்பில் இருப்பது என்றால் எதைக் குறிக்கிறது? அது, தேவன் உங்களை தனியாக நடக்க அனுமதிக்கமாட்டார்; வாழ்க்கை மலைப்பாக தெரியும்போது முகத்தைத் திருப்பிக்கொள்ளமாட்டார்; உங்கள் பயணத்தின் சிறிய விவரங்களையும் அவர் கவனிப்பார் என்பதைக் காட்டுகிறது. அவரது பராமரிப்பானது, தொடருவதாய் கவனிப்பதாய் மனதுருக்கமுள்ளதாய் இருக்கிறது.

இயேசு, தமது பராமரிப்பை, "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும், உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆகவே, பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" (மத்தேயு 10:29-31) என்று விவரிக்கிறார்.

இரண்டு அடைக்கலான் குருவிகள் உலகின் பார்வையில் முக்கியத்துவம் இல்லாதவையாக காணப்படலாம். ஆனாலும், பிதாவுக்குத் தெரியாமல் அவை விழாது. தேவன், அப்படி அடைக்கலான் குருவிகளை கவனித்தால், தம் அன்பு பிள்ளையாகிய உங்களை எவ்வளவு அதிகமாய் கவனிப்பார்? அவர் உங்கள் மதிப்பை, உங்கள் தேவைகளை, உங்கள் பயத்தை, ஏன்? உங்கள் தலையிலுள்ள மயிரின் எண்ணிக்கையையும் அறிந்திருக்கிறார்.

### ஒருபோதும் உறங்காத பராமரிப்பு

ஒருநாள் மாலைப்பொழுதில் எங்கள் வளாகத்தின் வழியாக நான் நடந்து சென்று கொண்டிருந்தேன். வாசலில் ஒரு பாதுகாவலர் (security guard) இருப்பதைப் பார்த்தேன். கண்காணித்து பாதுகாப்பது அவர் வேலையாக இருந்தபோதிலும், அவரது கண்கள் மொபைல்போனையே பார்த்துக் கொண்டிருந்தன. நான் அவரை நெருங்குவதைக்கூட அவர் கவனிக்கவில்லை. நான், மெதுவாக, "ஐயா, எல்லாம் நன்றாக இருக்கிறதல்லவா? நீங்கள், ஆர்வமாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

மனுஷனுடைய கண்காணிப்பு எவ்வளவு எல்லைக்குட்பட்டதாக இருக்கக்கூடும் என்பதை அப்போது உணர்ந்துகொண்டேன். மிகவும் உண்மையான மக்களும்கூட, சில வேளைகளில் நம்மை கவனிக்கவும் பாதுகாக்கவும் தவறிவிடக்கூடும். ஆனால், நம் பரம தகப்பனின் கவனம் ஒருபோதும் சிதறுவதில்லை. அவர் ஒருபோதும் அயர்வதில்லை; நாம் இருப்பதை ஒருபோதும் அவர் கவனிக்காமல் விடமாட்டார் (சங்கீதம் 121:3,4).

பூமிக்குரிய பாதுகாவலர்களைப்போல் அல்லாமல், தேவனுடைய கண்கள் எப்போதும் உங்கள்மேல் இருக்கும். நீங்கள் விழித்



samuel@jesuscalls.org
samueldhinakaranofficial

திருந்தாலும் உறங்கிவிட்டாலும், நண்பர்களோடு இருந்தாலும் தனிமையில் அமர்ந்திருந்தாலும் அவரது கவனிப்பு மாறாது.

### ஒவ்வொன்றிலும் வழிகாட்டுதல்

என் வாழ்க்கையை திரும்பிப் பார்க்கும்போது, தேவன், ஒரு தந்தையாக என்மீது அக்கறை கொண்டு என் வாழ்க்கையை எப்படி வடிவமைத்துள்ளார் என்பதை தெளிவாகக் காண முடிகிறது. நான் சிறுவனாக இருந்தபோதே, அவரது ஆவியின்மேல் ஆழமான தாகத்தைக் கொடுத்தார். ஏற்றவேளையில் என்னை பரிசுத்த ஆவியினால் நிரப்பினார்; தம்மோடு நெருங்கி ஜீவிக்கும்படி வழிநடத்தினார். என் தாத்தாவும் தந்தையும் பிரசங்கித்த கூட்டங்களில் கலந்துகொண்டதை நினைத்துப் பார்க்கிறேன். நானும் என் தங்கைகளும் அமைதியாக நாற்காலிகளில் அமர்ந்து, சொல்லப்படும் வசனங்களை குறித்துக் கொண்டிருப்போம். ஆரம்ப காலத்தின் அந்த ஒழுக்கங்கள், பழக்கமாக மட்டுமல்ல; பயபக்தியை கற்றுக்கொடுப்பதோடு, எங்கள் குணாதிசயங்களை வடிவமைப்பதற்கு பிதாவாகிய தகப்பன் பயன்படுத்திய வழியாகவும் அமைந்தது. எப்படி கௌரவமாக ஆடை உடுத்திக் கொள்வது, எந்தப் பொழுதுபோக்கை தவிர்ப்பது, கவனத்தைச் சிதறச் செய்யும் காரியங்களிலிருந்து எப்படி விலகவேண்டும் என்றெல்லாம் நடைமுறை விஷயங்களில் ஆண்டவர் எனக்கு வழிகாட்டினார். சில வீடியோக்களை பார்க்கும்போது, பாடல்களைக் கேட்கும்போது திடீரென எனக்குள்ளாக சங்கடமாக உணருவேன். "இது சரியல்ல; இதை விட்டு விலகு" என்று ஆண்டவர் என்னை எச்சரிக்கிறார் என்று அறிந்தேன். அந்த உள்ளான உறுத்தல், அவருடைய நோக்கத்திலிருந்து என்னை வழிவிலகச் செய்யும் காரியங்களிலிருந்து காப்பாற்றுவதற்காகவே என்று உணர்ந்தேன்.

> தேவன் உங்கள் அடிகளை காப்பார்; தீர்மானங்கள் எடுக்கும்போது உங்களை வழிநடத்துவார்; உங்கள் தேவைகளை அருளிச்செய்வார். அவரது பராமரிப்பு பூரணமானது; மாறாதது; தனிப்பட்டவிதமானது

### அவரது திட்டங்களுக்கு ஆயத்தப்படுத்தப்படுதல்

தகப்பனின் அக்கறை என்னை பாதுகாப்பது மட்டுமல்ல; நான் செல்லவேண்டிய பாதைக்கு ஆயத்தப்படுத்துவதுமாகும். சிறுவயதிலிருந்தே பாடல்களிலும் இசையிலும் என் தந்தையைப் பயன்படுத்தி என்னை ஊக்கப்படுத்தினார். பள்ளியில் நாடகங்களில் நடிக்கவும், போட்டிகளில் பங்குபெறவும், என்னுடைய தாலந்துகளை கண்டுகொள்ளவும் அவர் எனக்கு வாய்ப்புக் கொடுத்தார். அந்தச் சிறிய ஆரம்பங்கள், கூட்டங்களில் பாடுவதற்கும், தலைமைத்துவ கருத்தரங்குகளில் உரையாற்றுவதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களோடு பேசவும் எனக்கு உதவின. இதுபோன்ற வாய்ப்புகளுக்கு நான் தகுதியானவன் அல்ல என்பதை அறிந்திருந்ததால் இந்தப் பயணத்தைக் கண்டு வியந்தேன். ஆனாலும், தகப்பன் எல்லாவற்றையும் திட்டம் பண்ணியிருந்தார். ஒவ்வொரு கட்டத்திலும் வேண்டிய திறமைகளை, தைரியத்தை, ஞானத்தை அவர் அளித்தார். சரியான நேரத்தில் என்னை போஷித்து, ஏற்ற இடங்களில் என்னை அறிமுகம் செய்து இதுவரை நடத்தி வருகிறார்.

### உங்கள்பேரிலும் அதே அக்கறை

பிரியமானவர்களே, தகப்பனின் அக்கறை எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் உரியது. உங்கள் போராட்டங்களை அவர் அறிந்திருக்கிறார்; எப்போதாவது நீங்கள் சொல்லும் பயங்களையும் அவர் புரிந்துகொண்டிருக்கிறார். உங்கள் இருதயத்தில் மறைந்திருக்கும் கனவுகளையும், அந்தரங்கத்தில் நீங்கள் செய்யும் யுத்தங்களையும் அவர் பார்க்கிறார். எல்லா காலங்களிலும் உங்கள் கரத்தைப் பற்றிக்கொள்ள, உங்களைப் போஷிக்க, வழிநடத்த அவர் வாக்குக்கொடுக்கிறார். சில நேரங்களில் நீங்கள் தனிமையை உணரலாம்; ஆனால், நீங்கள் ஒருபோதும் தனிமையில் இல்லை. உங்கள் பெற்றோர், நண்பர்கள் அல்லது தலைவர்கள் உங்களோடு நடக்கவில்லை என்றாலும், பரம தகப்பன் அங்கே இருப்பார். நீங்கள் அவரது பராமரிப்பில் இருக்கிறபடியால் உங்கள் கால் சறுக்காது; உங்கள் வாழ்க்கை தோற்றுப்போகாது.

இந்த மாதத்தில், தகப்பனின் கண்கள் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன என்ற நிச்சயத்தோடு இளைப்பாறுங்கள். தேவன் உங்கள் அடிகளை காப்பார்; தீர்மானங்கள் எடுக்கும்போது உங்களை வழிநடத்துவார்; உங்கள் தேவைகளை அருளிச்செய்வார்.






நான் உறவுகளில் உண்மையாய் இருந்து வருகிறேன். ஆனால், இனி யாரும் உண்மையை மதிப்பதுபோல் தெரியவில்லை. மற்றவர்கள் யாரும் அவ்வாறு இல்லாதபோது, அர்ப்பணிப்போடு இருப்பதில் என்ன பலன்?

# நீங்கள் இன்னும் உண்மையாய் இருக்கிறீர்களா?

– வினிதா ஜோசப்

பிரியமானவரே,

உள்ளத்திலிருந்து நேர்மையாகக் கேட்கப்பட்ட கேள்வி இது. நீங்கள் உணர்வதுபோல தனிமையில் இல்லை. உறவுகள் கொண்டாடப்படுகிற உலகத்தில் நாம் வாழ்கிறோம். ஆண்டு நிறைவு நாட்கள் (Anniversaries) சமூக ஊடகத்தில் பகிரப்படுகின்றன; அன்பு, படங்களாகக் காட்டப்படுகிறது. ஆனால், இவற்றுக்கெல்லாம் பின்னணியில், வேதனைப்படுத்துகிற ஒன்று நடக்கிறது; உண்மை, நவீனத்துக்குரியதாக இல்லாமல் போய்விட்டது.

இக்காலத்தில், ஓர் உறவிலிருந்து இன்னோர் உறவுக்கு மாறுவது மக்களுக்கு இயல்பாகிவிட்டது. காரியங்கள் கடினமாகும்போது தெரிவுகளுக்கு உகந்து, உணர்ச்சிவசப்பட்டு விலகிவிடுகிறார்கள். ஆனால், வேதம், சற்று மேலான, சற்று பரிசுத்தமான உண்மைக்கு நம்மை அழைக்கிறது.

நாம் நேசிக்கும் மக்களை கொண்டாடுவது இப்போதும் உகந்ததாக இருக்கிறது. சந்தோஷமான தருணங்களில் மட்டுமல்ல, கடினமான தருணங்களிலும் அவர்களுக்கு உண்மையாக இருக்க தீர்மானிக்கும்போது இன்னும் உகந்ததாக அமையும்.

சமீபத்தில், ஒரு தம்பதியின் கதையைக் கேட்டேன். அது என் இதயத்தைத் தொட்டது. பல ஆண்டுகளுக்கு முன்பே அவர்களுக்கு திருமணம் நடந்தது. மனைவி, எப்போதும் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்பார்கள். எல்லா தருணத்திலும் மனைவி, ‘‘நீங்கள் அதைச் சரியாக செய்யவில்லை... இது தவறு... இந்தப் பையை எடுங்கள்... இல்லை... அப்படி இல்லை...’’ என்று கணவரை குறை சொல்லிக்கொண்டே இருந்தார்கள். ஒருநாள், இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு மருத்துவர், கணவரிடம், ‘‘இத்தனை ஆண்டுகளாக ஏன் இவர்களோடு இருக்கிறீர்கள்?’’ என்று கேட்டார். அந்த மனிதர், சாந்தமாக, ‘நான் சுகத்திலும் சுகவீனத்திலும், மரணம் எங்களைப் பிரிக்கும்வண்ணம்...’ என்று ஆலயத்தில் வாக்குக்கொடுத்திருக்கிறேன். அதை நம்புகிறேன். அவள் எப்படி இருந்தாலும், நான் உண்மையாக இருப்பேன்’’ என்றார்.

அதுதான் உடன்படிக்கையின் வலிமை. தேவ பக்திக்குரிய அன்பின் அழகு அது. கணவராகட்டும், மனைவியாகட்டும், பெற்றோராகட்டும், உற்ற நண்பராகட்டும், இல்லை உங்கள் ஆசிரியராகட்டும், எல்லா உறவுகளையும் இணைப்பது உண்மை மட்டுமே. ஆடம்பரமான செயல்கள் அல்ல; அன்பும் மரியாதையும் காட்டுவதும், ஒருவர் பட்சத்தில் நிற்பதும், எளிதாக இல்லாதபோதும் உறவுக்கு முக்கியமாகும்.

## உறவுகளில் நாம் எப்படி உண்மையாக இருக்கமுடியும்?

உங்கள் அன்பானோரை மற்றவர்களுடன் ஒப்பிடாதீர்கள். ஒப்பிடுதல், கள்ளன்போன்றது. அது மகிழ்ச்சியைத் திருடும். உங்களுக்கு தேவன் தந்திருப்பவரின் தனித்தன்மையை குலைத்துப்போடும்.

உங்கள் கண்களையும் இருதயத்தையும் காத்துக்கொள்ளுங்கள்: உண்மையில்லாத தன்மையின் முதற்படி, பெரும்பாலும் சரீரப்பிரகாரமானதல்ல; உணர்ச்சிகரமானது. விழிப்புடன் இருங்கள். உங்கள் உறவை கனப்படுத்தாத எண்ணங்களை, படங்களை ஊக்குவிக்காதீர்கள்.

அடிக்கடி அன்புடன் பேசுங்கள்: தவறான புரிதலை தொடரும் மௌனம் பெரும்பாலும் மலைபோல வளர்ந்து நிற்கும். பேசிக்கொள்வது, விசேஷமாக மனமிரங்கி பேசுவது காயத்தை ஆற்றும்.



Dr. ஷில்பா தினகரன் பதிலளிக்கிறார்

உங்களை இணைத்தவர் யார் என்பதை மறந்துபோகாதிருங்கள்: எந்த விவாதம் எழுந்தாலும் தேவன் உங்களை இணைத்துள்ளார் என்பதை மறவாதீர்கள். உங்கள் கணவர் / மனைவி உங்களுக்கு எதிரி அல்ல. அவர்கள் உங்கள் இணை. தேவன் தந்த துணை.

> ஆடம்பரமான செயல்கள் அல்ல; அன்பும் மரியாதையும் காட்டுவதும், ஒருவர் பட்சத்தில் நிற்பதும், எளிதாக இல்லாதபோதும் உறவுக்கு முக்கியமாகும்

வேதத்தில் உண்மைக்கு ஏற்ற உதாரணம், ஓசியா - கோமேர் கதையாகும். தேவன், தீர்க்கதரிசியாகிய ஓசியாவை கோமேர் என்ற பெண்ணை திருமணம் செய்யும்படி கூறினார். அவள் அவனுக்கு உண்மையாக இருக்கமாட்டாள். மீண்டும் மீண்டும் அவனுக்குத் துரோகம் செய்தாள். ஆனால் ஓசியா, அவளை மறுபடியும் மறுபடியும் சேர்த்துக்கொண்டேயிருந்தான். ஏன்? தேவன் தமது உண்மையைக் குறித்த சித்திரத்தை, பல முறை நாம் அலைந்து திரிந்தாலும் எப்போதும் நம்மை திரும்ப சேர்த்துக்கொள்வதை காண்பிப்பதற்காக அப்படிச் செய்தார்.

ஃப்ரண்ட், நம்முடைய பெலவீனங்களில் தேவன் அவ்வளவு உண்மையாக இருந்தாரானால், நாம் நம்முடைய உறவுகளில் எவ்வளவு அதிகமாய் உண்மையை காண்பிக்கவேண்டும்? ஒருவேளை நீங்கள், "நான் உண்மையாகவே இருந்தாலும் காயப்படுத்தப்பட்டால் என்ன செய்வது?" என்று கேட்கலாம். இதே கேள்விதான் என்னிடம் அடிக்கடி கேட்கப்படுகிறது. ஒருவர், "சகோதரி, நான் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன். நான் உண்மையாக, நேர்மையாக, அன்பாக இருந்தேன். ஆனாலும், அவர் என்னை ஏமாற்றினார், விலகிப் போனார். என் உள்ளத்தை உடைத்துவிட்டார். உண்மையாக இருப்பதற்கு என்ன அவசியம்?" என்று கேட்டார்கள். அன்பானவர்களே, நீங்கள் அந்தரங்கத்தில் அழுவதை தேவன் பார்த்துக்கொண்டிருக்கிறார். உங்கள் இருதயத்தின் உண்மையை அவர் காண்கிறார்.

வேதம், "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" (நீதிமொழிகள் 28:20) என்று கூறுகிறது. உங்கள் உண்மை வீணாகாது. அது கவனிக்கப்படும்; பலனை பெறும். நீங்கள் உண்மையாக இருக்கும் நபர், அதை மதிக்காமல் இருக்கலாம்; ஆனால், தேவன் மதிப்பார். அவர் அந்த உறவை சீர்ப்படுத்தலாம் அல்லது இன்னும் நல்ல வேறொரு உறவை தந்து ஆசீர்வதிக்கலாம். எப்படியாயினும், நான் உண்மையாயிருந்தேன்; நான் நேசித்தேன்; நான் துரோகம் செய்யவில்லை என்று நீங்கள் மன உறுதியுடன் இருக்கலாம்.

நீங்கள் உண்மையாயிருக்கும்போது குறுகலான பாதையில் நடக்கிறீர்கள்; ஆகவே, தேவனே உங்களோடு நடக்கிறார்; உடைந்த உள்ளங்களை குணப்படுத்துகிறார்; முறிந்த நம்பிக்கையை சீர்ப்படுத்துகிறார்; தம்மை கனப்படுத்துகிறவர்களை கனப்படுத்துகிறார். உண்மையாயிருப்பதில் பலனில்லை என்ற பொய்யை நம்பாதிருங்கள். அது வலிமையானது; அரிதானது; புனிதமானது. நல்ல உறவு மட்டும் உங்களுக்குப் பலனாகக் கிடைக்காது; தேவ தயவு உங்கள் வாழ்க்கையில் விளங்கும். உங்கள் உண்மை, இந்த வாழ்க்கையிலும் வரப்போகும் வாழ்க்கையிலும் ஆசீர்வாதமாக பெருகும். தேவன் அருளும் பலனை உங்கள் வாழ்க்கையில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்; ஜெபிக்கிறேன்.


## கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

SCAN & PAY

SCAN & PAY INSTANTLY VIA UPI

UPI jesuscalls@indus

**BANK TRANSFER:**

| Bank | Beneficiary | A/c No. | IFSC |
|---|---|---|---|
| IndusInd | JESUS CALLS | 555444333222111 | INDB0000167 |
| ICICI | JESUS CALLS | 000901056144 | ICIC0000009 |

Please share your donation detail to us through Whatsapp to 98409 99923

Website: **www.jesuscalls.org/donate**

**Jesus Calls Mobile app** (available in Android & IOS)

**EMO/CHEQUE /DD**

- Write in favour of "JESUS CALLS"
- Can be sent by speed post to: Prayer Tower, 16, D.G.S. Dhinakaran Road, Chennai 600028.
- In person: At the prayer tower in your area

For donation related/partner plans/receipts related queries, please call or Whatsapp 98409 99923. For 24x7 Prayer support, please call 8546999000

## உங்கள் கொண்டாட்டம் அவர்களுக்கு இரட்சிப்பாகும்: நித்தியத்தை விளம்பும் விதைகளைத் தூவுவோம்

எல்லா அற்புதமும் ஒரு விசுவாச கிரியையினால்தான் ஆரம்பிக்கிறது. ஒரு சிறு பையன் தன் உணவை கொடுத்தான்; இயேசு அதை பல்லாயிரக்கணக்கானோருக்குப் பெருகப் பண்ணினார். உங்கள் கொண்டாட்டத்தை நீங்கள் காணிக்கையாகக் கொடுக்கும்போது என்ன நடக்கும்?

இந்த எளிமையான, வல்லமையான பகிர்வில் ஒரு தெய்வீக கொள்கையைக் காண்கிறோம். உற்சாகமாய் கொடுக்கப்படுகிறவற்றை தேவன் நாம் நினைக்கிறதற்கும் அதிகமாய் பெருகப்பண்ணுகிறார் (யோவான் 6ம் அதிகாரம்). உங்களுடைய பிறந்தநாள், திருமண நாள் அல்லது நன்றி செலுத்தும் தருணங்களான விசேஷித்த தினத்தில் நீங்கள் காணிக்கை கொடுக்கலாம். இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி ஊழியம் மூலமாக உங்கள் விதை, தேசமெங்கும் பசியாயிருக்கும் ஆத்துமாக்களுக்கு ஜீவனின் அப்பமாகக் கொடுக்கப்படும்.

நீங்கள், கணக்கற்ற இல்லங்களுக்கு தொலைக்காட்சியின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கு காரணமாவீர்கள். ஒவ்வொரு மாதமும் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட மொழிகளில் தயாரிக்கப்படும் 150க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் வாயிலாக, இதுவரை சந்திக்கப்படாதோரை, விடாய்த்தோரை, காணாமற்போனோரை, நம்பிக்கை தரும் வார்த்தைக்காக ஏங்கியிருப்போரை சந்திக்கிறோம். அவர்கள் இல்லத்திற்கு நம்பிக்கையைக் கொண்டு செல்லும் ஒருவராக நீங்கள் இருக்கலாம்.

- ◆ உங்கள் பிறந்தநாள், ஒருவர் தன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும் நாளாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்களா?
- ◆ உங்கள் திருமண நாள், கிறிஸ்துவின் அன்பினால் உங்கள் வாழ்க்கை மாற்றம் பெறவேண்டுமென்று விரும்புகிறீர்களா?

## தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றை தாங்குங்கள்
## இதுவரை சந்திக்கப்படாதோரை *சந்திப்போம்*



## தொலைக்காட்சி நிகழ்ச்சி ஆதரவாளரின் சாட்சி – வெளியேற வேண்டிய நிலை மாறியது

என் மகன் வைஷாக் இந்திய மென்பொருள் நிறுவனம் ஒன்றில், எந்த பிரச்னையுமின்றி, ஏழு ஆண்டுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பணிபுரிந்து வந்தான். திடீரென்று அந்த நிறுவனம் அந்த வேலை முடிந்துவிட்டதாக அறிவித்தது. அவன் இந்தியாவுக்கு திரும்ப வேண்டும்; ஆனால், விசா இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு இருந்தது. அவன் திருவனந்தபுரத்திலுள்ள தன்னுடைய பழைய நிறுவனத்தில் ஒரு வேலை வாங்கலாம் என்று முயற்சித்தான். ஆனால், அவர்கள் தற்போது வேலை இல்லை என்று கூறிவிட்டார்கள். என்ன செய்வதென்று தெரியாத நிலையில் அவனுக்காக ஜெபிக்கும்படி, Dr. பால் தினகரனுக்கு கடிதம் எழுதினேன். அவர், "நிச்சயமாகவே உங்கள் மகனுக்கு வேலை கிடைக்கும்" என்று பதில் எழுதினார்; அவர் ஜெபித்தபடியே தேவன், மகனுக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளில், அரசு சார்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் அருமையான வேலை கிடைக்கும்படி அருள்புரிந்ததோடு, அவனுக்கு கிரீன்கார்டு கிடைக்கும்படி செய்து, நிரந்தரமாக அந்த நாட்டிலேயே தங்கும்படியான ஆசீர்வாதத்தையும் கொடுத்துள்ளார். இதற்காக நான் தொலைக்காட்சி நிகழ்ச்சியை தாங்கும்படி ஸ்தோத்திர காணிக்கை அனுப்பியுள்ளேன். தேவனுக்கே சகல மகிமையையும் செலுத்துகிறேன்.

- **ராணி**, திருவனந்தபுரம்.

## ஒருவரின் ஜெபத்திற்குப் பதிலாக மாறுங்கள்

நீங்கள் ஒரு நிகழ்ச்சியைத் தாங்கும்போது, உங்கள் விசுவாச பயணமானது இந்த ஊழியத்தோடு இணைகிறது. நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்போது Dr. பால் தினகரன் குடும்பத்தினர் உங்கள் கீழ்ப்படிதலை கனப்படுத்தும்விதமாக, உங்கள் பெயரை உச்சரித்து உங்கள் ஜெப விண்ணப்பங்களை ஆண்டவரிடம் ஏறெடுப்பார்கள். விசுவாசத்தோடு விதைத்த திருமதி ராணி அற்புதங்களை அறுவடை செய்ததுபோல, நீங்களும் தெய்வீக தயவுக்குள் அடியெடுத்து வைப்பீர்கள். கொடுக்கும் உங்கள் செயல், தேவ கரமாக மாறி, முறிந்துபோனவர்களை தொட்டு நம்பிக்கையை திரும்ப அளிக்கும்.

---

### கூப்பிடுதலுக்கு பதில். உங்கள் விசுவாசம், தேசமெங்கும் செல்லட்டும்

- ◆ முழு ஸ்பான்சர்ஷிப்: தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றினை முழுவதுமாக தாங்குவதற்கு (sponsor) ரூ.30,000/- நன்கொடை அளிக்கிறேன்
- ◆ Cosponsor: மற்ற விசுவாசிகளுடன் இணைந்து ஒரு நிகழ்ச்சியைத் தாங்குவதற்கு (Cosponsor) ரூ.10,000/- நன்கொடை அளிக்கிறேன்

உங்கள் கொண்டாட்டம் நல்ல நினைவுகளாக மட்டும் நிலைத்திருக்காமல் தேவனுடைய ராஜ்யத்திற்கு முக்கிய முன்னேற்றமாக மாறட்டும்.

- ◆ மேலும் விவரங்களை உங்கள் பகுதியிலுள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்று அறிந்துகொள்ளலாம்.
- ◆ https://www.jesuscalls.org/donate/tvs என்ற இணைப்பின் மூலம் நன்கொடை வழங்கலாம்.
- ◆ மின்னஞ்சல்: tvs@jesuscalls.org தொடர்புக்கு : 9500127277
- ◆ முகவரி: ஜெப கோபுரம், Dr. 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028.

**DONATE TO TV MINISTRY**

JESUS CALLS
PRAYING FOR THE WORLD

# WE'RE HIRING

COME JOIN US FOR A HEARTWARMING MISSION
*These are some of the job positions available at Jesus Calls. We invite you to apply or refer.*

**FOR THE FULL LIST OF POSITIONS, PLEASE VISIT www.jesuscalls.org**

| NEW POSITIONS | ROLE / SKILLSET |
|---|---|
| **MINISTRY: JESUS CALLS, LOCATION: CHENNAI** | |
| HEAD – ADMINISTRATION | OVERSEES ORGANIZATIONAL ADMINISTRATION, OPERATIONS, AND FACILITY MANAGEMENT |
| HEAD – IT | LEADS DIGITAL INFRASTRUCTURE, SYSTEMS DEVELOPMENT, AND TECHNOLOGY STRATEGY |
| FINANCE CONTROLLER | DIRECTS FINANCIAL PLANNING, REPORTING, AND STATUTORY COMPLIANCE |
| HEAD OF SECURITY | ENSURES CAMPUS AND EVENT SECURITY, RISK CONTROL, AND SAFETY OPERATIONS |
| SR. MANAGER – BRANDING & PR | LEADS BRAND COMMUNICATIONS, MEDIA RELATIONS, AND PUBLICITY STRATEGY |
| SR. MANAGER – LEARNING & DEVELOPMENT | DESIGNS TRAINING FRAMEWORKS, LEADERSHIP PROGRAMS, AND STAFF DEVELOPMENT |
| SR. MANAGER – YOUTH & KIDS MINSTRY | DEVELOPS MINISTRY PROGRAMS, OUTREACH EVENTS, AND CREATIVE ENGAGEMENT FOR YOUTH AND CHILDREN |
| SR. MANAGER – TELEPHONE PRAYER TOWER | OVERSEES 24/7 PRAYER LINE OPERATIONS, CALL MINISTRY QUALITY, AND TEAM MANAGEMENT |
| SR. MANAGER – NATIONAL PRAYER MINISTRY ALLIANCE & INSTITUTIONS | BUILDS ALLIANCES WITH CHURCHES, MINISTRIES, AND CHRISTIAN INSTITUTIONS NATIONWIDE |
| SR. MANAGER – CYBER SECURITY | IMPLEMENTS CYBER SAFEGUARDS, DATA SECURITY POLICIES, AND IT RISK MANAGEMENT |
| SR. MANAGER – EVENTS | PLANS, ORGANIZES, AND EXECUTES NATIONAL EVENTS AND REGIONAL OUTREACHES |
| SR. MANAGER – SOCIAL MEDIA | LEADS DIGITAL STRATEGY, CONTENT CREATION, AUDIENCE ENGAGEMENT, AND ONLINE CAMPAIGNS |
| SR. MANAGER – BROADCAST ENGINEERING | MANAGES TECHNICAL BROADCAST SYSTEMS, TRANSMISSION QUALITY, AND EQUIPMENT MAINTENANCE |
| SR. MANAGER – PRAYER TOWER (PT) | LEADS PRAYER TOWER OPERATIONS, STAFF, AND MINISTRY EXECUTION |
| MANAGER – DATA ACQUISITION | MANAGES DATABASE GROWTH, ANALYTICS, AND INFORMATION SYSTEMS |
| MANAGER – PARTNER ENGAGEMENT | BUILDS RELATIONSHIPS WITH DONORS AND PARTNERS THROUGH EVENTS AND FOLLOW-UP |
| MANAGER – PARTNER RETENTION | IMPLEMENTS STRATEGIES FOR DONOR LOYALTY, RETENTION, AND FAITH ENGAGEMENT |
| AREA MANAGER | LEADS REGIONAL OPERATIONS, FIELD MINISTRY, AND TEAM PERFORMANCE<br>LOCATION: DELHI, MADURAI, DIMAPUR, CHENNAI (TN NORTH), MUMBAI |
| MANAGER – PRAYER TOWER | MANAGES LOCAL PRAYER TOWER OPERATIONS, MINISTRY ACTIVITIES, AND TEAM DISCIPLESHIP<br>LOCATION: MADURAI, KUKATPALLY, RAJAHMUNDRY, TIRUNELVELI, THIRUVANANTHAPURAM, AVADI, BHIMAVARAM, SHILLONG, ROURKELA, DAHISAR, RAJAJI NAGAR, VIJAYAWADA, COIMBATORE, BETHESDA, SIVAKASI, VELLORE MAIN, KOCHI, HIMMAT NAGAR, BHILASPUR, ITANAGAR, GOA |
| TV CHANNEL HEAD | OVERSEES PROGRAMMING, BROADCAST, DISTRIBUTION, MARKETING, AND PROMOTIONS |
| SR. MANAGER – PROGRAMMING (MEDIA) | MANAGES PRE-PRODUCTION, PRODUCTION, POST-PRODUCTION, QUALITY CONTROL, AND BUDGETING |
| **MINISTRY: SEESHA, LOCATION: CHENNAI** | |
| CHIEF OPERATING OFFICER (COO) | LEADS HUMANITARIAN OPERATIONS, PROGRAM STRATEGY, AND FIELD IMPLEMENTATION |
| **PROJECTS, LOCATION: CHENNAI** | |
| CHIEF EXECUTIVE OFFICER (CEO) | PROVIDES STRATEGIC DIRECTION, BUSINESS LEADERSHIP, AND GROWTH MANAGEMENT |
| CHIEF OPERATING OFFICER (COO) | MANAGES BUSINESS OPERATIONS, PERFORMANCE, AND ORGANIZATIONAL EFFICIENCY |
| CHIEF FINANCIAL OFFICER (CFO) | DIRECTS FINANCIAL STRATEGY, INVESTMENT PLANNING, AND CAPITAL MANAGEMENT |
| HEAD – BUSINESS DEVELOPMENT | IDENTIFIES NEW BUSINESS, OPPORTUNITIES, ESTABLISHES NEW VENTURES, MARKET RESEARCH & FINANCE PLANNING |
| FINANCE MANAGER | HANDLES ACCOUNTING OPERATIONS, FINANCIAL REPORTING, AND AUDIT COMPLIANCE |

**SUBMIT YOUR CV: careers@jesuscalls.org;**
**WHATSAPP CV TO: 9360136417, 6381754522**
**Please share it with those who may be blessed by it**



# தெய்வீக சத்தியத்தின் பாதை!

"கர்த்தாவே! உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னை போதித்தருளும்" (சங்கீதம் 25:5)

நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொருநாளும் ஏறெடுக்க வேண்டிய விண்ணப்ப ஜெபம் இதுவாகும். தேவ மனிதனாகிய தாவீது இவ்விதமாக கர்த்தரை நோக்கி பயபக்தியுடன் விண்ணப்பம் பண்ணுகிறான். ஆகவே தான், 1 நாளாகமம் 29:28-ல், "...அவன் மகிமையுள்ளவனாக வாழ்ந்து, தன் முதிர் வயதிலே மரணமடைந்தான்" என்று வாசிக்கிறோம். இப்படிப்பட்ட தெய்வீகம் நிறைந்த வாழ்வை எவ்வாறு வாழ்வது என்பதை வேதாகம ஆதாரங்களுடன் ஆராய்ந்து பார்த்து, நம் வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் ஆசீர்வாதம் பெறுவோமாக!

### உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி... என்னை போதித்தருளும்

இந்த விதமான தெய்வீக வழிநடத்துதலை பெற்றுக் கொள்ள நாம் செய்ய வேண்டுவது என்னவெனில், சங்கீதம் 69:13-ன்படி, நாம் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்ய வேண்டும். அப்பொழுது கர்த்தர் தமது மிகுந்த கிருபையினாலும்,



அவரது "இரட்சிப்பாகி" சத்தியத்தினாலும் நம்மை நிரப்புவார். யோவான் 8:44-ல், பிசாசானவன் பொய்யனும், பொய்க்கு பிதாவுமாயிருக்கிறபடியால், அவனிடத்தில் சத்தியம் இல்லை என்றும், அவன் சத்தியத்திலே நிலை நிற்கவுமில்லை என்றும் அறிகிறோம். யோவான் 14:6-ல், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்று ஆண்டவராகிய இயேசு கூறுகிறார். யோவான் 17:17-ல், "**கர்த்தருடைய வசனமே**" சத்தியம் என்று நாம் வாசிக்கிறோம். ஆம்! தேவனுடைய வார்த்தை நம்மை பரிசுத்தமாக்கும். அதுபோன்றே "கர்த்தருடைய வசனம்" நம்மை உயிர்ப்பிக்கிறதாயுமிருக்கிறது. உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்கீதம் 119:105) என்று தாவீது அனுபவித்தும் கூறுகிறான். நாம் எவ்வளவாக பயபக்தியோடும், கருத்தோடும் கர்த்தருடைய வசனத்தை வாசிக்கிறோம்? இவ்விதமான தெய்வீக அநுபவத்தை பெற்றிருக்கிறோமா?

ஊழியனாகிய தீத்துவுக்கு பவுல், உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்" என்று எழுதுகிறார் (தீத்து 1:9). மார்த்தாளின் சகோதரியாகிய மரியாள், இயேசுவின் பாதத்தருகே

ஸ்டெல்லா தினகரன் / Stella Dhinakaran @jesuscalls.org

> தேவ வசனத்தை பயபக்தியோடு வாசித்து, சத்தியத்தினால் நிறைந்து வாழும்பொழுது, கர்த்தருக்குள் வளர்ந்து பெருகுவீர்கள்

உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள் என்றும், இயேசு, ‘‘மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்’’ என்று கூறியதையும் நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (லூக்கா 10:39-42). யோவான் 15:24-ல், ‘‘என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு’’. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்றும் இயேசு கூறுகிறார். கொலோசெயர் 3:16-ல், ‘‘கிறிஸ்துவின் வசனம், உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும், பரிபூரணமாக வாசமாயிருப்பதாக’’ என்று வாசிக்கிறோம்.

யோவான் 5:24-ன்படி, ‘‘என் (கர்த்தரின்) வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு’’! ‘‘ஆனாலும், சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்’’ என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 66:2). 5வது வசனத்திலும் இதே காரியத்தை நாம் வாசிக்கிறோம்.

உதாரணமாக, சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள், தேவனுக்கு பயந்து, அவருடைய வார்த்தைகளை கவனமாய் வாசித்து தியானித்து, அதை ஜனங்களுக்கு பிரசங்கம் பண்ணினார், அது, ஜனங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாகவும், ஆறுதலாகவும் இருந்தது. அதேபோன்று இன்றும் ஒவ்வொரு தேவனுடைய ஊழியரும் மற்றும் குடும்பத்தின் மக்களும் பயபக்தியோடு தேவ வசனத்தை வாசித்து, ‘‘சத்தியத்தினால்’’ நிறைந்து வாழும்பொழுது, கர்த்தருக்குள் வளரவும், பெருகவும் தக்கதான ஆசீர்வாதம் பெறுவது உறுதியான காரியம்!

## எல்லாவற்றிலும் வளருகிறவர்களாயிருங்கள்

பரிசுத்த ஊழியன் பவுல் எபேசியருக்கு எழுதும்பொழுது இவ்விதமாக எழுதுகிறார். நாம் சத்தியத்தை நமது அனுதின வாழ்வில் அன்புடன் கைக்கொண்டு, கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவர்களாயிருக்க வேண்டும் (எபேசியர் 4:15). இந்த வளர்ச்சி எதுவரைக்கும் இருக்கவேண்டும்? எபேசியர் 4:11-ல் வாசிக்கிறபடியே, முதலாவது விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாயிருக்க வேண்டும். ஆபிரகாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவனாகவும், விசுவாசம், அறிவு பெருத்தவனாகவும் சத்தியத்தில் நிறைந்தவனாக தன் வாழ்வில் மிகப்பெரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டான் என்று வாசிக்கிறோம்.

இந்த உலக வாழ்வில் மிகப்பெரிய வேதனையைக் கொடுப்பது குழந்தை இல்லாத நிலையாகும். ஆபிரகாம் அவனது வாழ்வில் வெகுநாள் வரை இந்த நிலைமையில் வேதனையுடன் வாழ்ந்துகொண்டிருந்தான். ஆனால், இதிலிருந்து தேவனுடைய பூரண ஆசீர்வாதத்தினால் நிறையப்பட அவன் செய்த தென்ன?

**‘‘அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும் போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.’’** (ரோமர் 4:19-21)

இல்லாத நிலைமையிலிருந்த அவன் வாழ்வில் இருக்கிறவைகளான நிறைவான ஆசீர்வாதத்தை அவனால் எப்படி பெற்றுக்கொள்ள முடிந்தது? என்பதை மேற்கண்ட வசனங்கள் அழகாக விளக்குகின்றன. முதலாவதாக, அவன் விசுவாசத்தில் பலவீனமாயிராத படிக்கு, அவன் தேவனுடைய வசனங்களை கவனமாக வாசித்தும், அதில் கூறப்பட்ட அவருடைய வாக்குத்தத்தை தனக்கென்று சொந்தமாக உரிமையாக்கிக் கொண்டும், தேவன் அதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பியும், அவரை மகிமைப்படுத்தியும், விசுவாசத்தில் வல்லவன் ஆனான்! தன் சரீரம் செத்துப்போனதையும், தன் மனைவி சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் அவன் எண்ணாதிருந்தான். ஆம்! இதை ஆதியாகமம் 18:11-ல் நாம் வாசிக்கிறோம்.

## எவ்வாறு அவனுக்குள் விசுவாசம் பெருகியது?

தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவன் ஆனான் என்று தெளிவாக வாசிக்கிறோம்.

இன்றைக்கும் உங்கள் வாழ்க்கையில் குழந்தை இல்லாமை போன்ற பல்வேறு இல்லாமைகளினிமித்தம் நம்பிக்கையற்ற நிலைமையில் கண்ணீரில் வாழ்ந்து கொண்டிருக்கிற அருமையானவர்களே, நீங்களும் வேத வசனங்களை கருத்தாய் வாசித்து, அதிலுள்ள சத்தியங்களை கவனமாக ஆராய்ந்து பார்த்து, விசுவாசத்துடன் கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்யுங்கள். அப்பொழுது யோவான் 8:32-ல் வாசிக்கிறபடியே, ‘‘சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்’’ என்ற வேத வாக்கிற்கிணங்க, உங்கள் வாழ்விலுள்ள சகல

வித இல்லாமைகளையும் இருக்கிறவைகளாக கர்த்தர் மாற்றி, உங்களையும் ஆசீர்வாதமாக வழிநடத்துவார்.

என்னுடைய வாழ்க்கையே இதற்கு மிகவும் நல்ல உதாரணமாக இருக்கிறது. எனக்கு திருமணம் ஆனபின்பு முதலில் கர்ப்பச்சிதைவும், அதைத் தொடர்ந்து கர்ப்பத் திலேயே மரித்துப் பிறந்த அழகான ஆண் குழந்தை யுமாக, வேதனையின்மேல் வேதனை, கண்ணீரின் மேல் கண்ணீர் நிறைந்த வாழ்வாகவே எங்கள் திருமண வாழ்வும் அமைந்தது. அப்படிப்பட்ட நிலையில் நாங்கள் இருவரும் கர்த்தரின்மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் விசுவாசம் கொண்டவர்களாக, "உம்மை உறுதி யாகப் பற்றிக்கொண்டவன் உம்மையே நம்பியிருக்கிற படியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்" (ஏசாயா 26:3) என்ற வசனத்தின்படியே, பூரண சமாதானம் பெற்று, அதைத் தொடர்ந்து ஏற்ற வேளையில் கர்த்தர் அருளிய நிறைவான ஆசீர்வாதத் தையும் பெற்றுக்கொண்டோம். ஆம், அருமையான மகன் பால் தினகரனையும், ஆறு வருடங்களுக்கு பிறகு அன்பு மகள் ஏஞ்சலையும் பெற்றெ டுத்து அகமகிழ்ந்து களிகூர்ந் தோம்.

> சத்திய ஆவியானவரின் நிறைவை வாஞ்சித்து பெற்று, அநேகரை சத்தியத்தின் பாதையில் வழிநடத்த தேவன் உங்களுக்கு கிருபைபுரிவார்

இன்றைக்கு இதே ஆசீர்வாதத்தை உங்களுக் கும் அருளும்படி ஆண்டவர் காத்திருக்கிறார். ஆகவே, நீங்களும் சத்தியத்தை கருத்துடனும், பயபக்தியுட னும் வாசித்து, கருத்தாய் தியானித்து, ஆபிரகாம் பெற்ற விதமாகவே கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். நம் ஆண்டவர் பட்சபாத மற்றவர்! சங்கீதம் 34:10-ன் படியே கர்த்தரை பயபக்தி யோடுதேடி, வேண்டுகிற நன்மைகளை நிறைவாய் பெற்று மகிழுங்கள்.

**"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்."** (நீதிமொழிகள் 10:22)

## சத்தியத்திற்கு கீழ்ப்படியுங்கள்

**ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கிக்கொள்ளுங்கள்...** (1 பேதுரு 1:22)

**"நிறைவானது வரும்போது, குறைவானது ஒழிந்து போம்"** (1 கொரிந்தியர் 13:10)

**"அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறை வில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்கு காத்திருக் கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர் களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்"** (1 கொரிந்தியர் 1:7,8)

முடிவுபரியந்தம் கர்த்தருக்குள் ஸ்திரப்பட்டவர்களாக, அவருடைய இரண்டாம் வருகைக்காக காத்திருங்கள். இத்தகைய விதமான தெய்வீக வாழ்க்கைக்கு வழி கோலுவது "பரிசுத்த ஆவியானவரின் நிறைவேயாகும்". ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கெல்லாம் முன் மாதிரியாக வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்து முடித்தார். இதற்கு காரணம், அப்போஸ்தலர் 10:38-ல் நாம் வாசிக்கிறபடி, தேவாதி தேவன் இயேசு கிறிஸ்துவை பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணி, தேவன் அவருடனேகூட இருந்தார்.

## இந்தவிதமான பரிசுத்த வாழ்வை நாம் ஒவ்வொரு வரும் இவ்வுலக வாழ்வில் எவ்வாறு பெறுவது?

லூக்கா 11:13-ன்படி, "பரம பிதாவானவர் பரிசுத்த ஆவியை தம்மிடம் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு கொடுப்பது அதிக நிச்சயம்" என்று வாசிக்கிறபடியே, நாம் பயபக்தியோடும், விசுவாசத்தோடும், அவர் நம்மை தமது பரிசுத்த ஆவியானவரால் நிரப்பும்படி கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்வோம். கர்த்தர் தம்முடைய வார்த்தை யின்படியே நம்மை நிரப்புவார்.

இதற்கு நானும் என் குடும்பத்தினர் ஒவ்வொருவரும் நற்சாட்சிகளாகும். சகோதரர் தினகரன் அவர்கள் இந்த சத்தியத்தை அறிந்த மாத்திரத்தில், தொடர்ந்து 7 ஆண்டு கள் கர்த்தருடைய ஆவியானவரால் தன்னை நிரப்பும்படி ஆண்டவரிடம் கருத்தாய் பிரார்த்தனை செய்து வந்தார். அப்படியே மிகவும் அருமையான விதத்தில் வரங்களி னாலும் வல்லமையினாலும் கர்த்தருடைய ஆவியான வரால் நிரப்பப்பட்டு, அவருக்கு மகிமையான வாழ்வை வாழ்ந்தார். அதைத் தொடர்ந்து நாங்கள் குடும்பத்தின ராகவும், எங்கள் உறவினரில் அநேகரும் இத்தகைய தெய்வீக வாழ்வினை தொடர்ந்து பெற்று, கர்த்தருக் கென்று நற்சாட்சிகளாக இன்னும் விளங்கி வருகிறோம்.

எனக்கு அருமையானவர்களே, வேத புத்தகத்திலே புறஜாதியானாயிருந்த கொர்நேலியு, இப்படிப்பட்ட தெய்வீக வாஞ்சையினால் நிறைந்து, தன் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களோடு இணைந்து, கர்த்தர் அருளிய வல்லமை யினால் நிறைந்த வாழ்வைப் பெற்று, அவருக்கென்று நற்சாட்சியாக வாழ்ந்தான் என்று அப்போஸ்தலர் 10-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம்.

பிரியமானவர்களே! இன்றைக்கும், இதனை வாசிக்கிற நீங்கள் ஒவ்வொருவரும்கூட இந்த விதமான தெய்வீக வல்லமை நிறைந்த வாழ்வை வாஞ்சித்து பெற்று, சத்தியத்திற்கு தூணும், ஆதாரமுமாக விளங்கும் படிக்கும், உங்கள் வாழ்வும் கர்த்தருக்கு முன்பாக பரிசுத் தம் நிறைந்ததாய் அவரால் ஆசீர்வாதத்தை பெறும்படிக் கும் பயபக்தியோடுகூட உங்களை அர்ப்பணியுங்கள். நீங்கள் கர்த்தருக்கு பயந்து, சத்திய ஆவியானவரின் நிறைவை வாஞ்சித்து பெற்று, அவருக்கென்று மகிமை நிறைந்த வாழ்வு வாழவும் மற்றும் அநேகரை அந்தவித மான தெய்வீக பாதையில் வழிநடத்தவும் தேவன் தாமே உங்களுக்கு கிருபைபுரிவாராக!

# இன்றைய இறை தியானம்

## நவம்பர் – 2025



**1** **லூக்கா 1:35 - உன்னதமானவர்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:14; சங். 21:7; 92:8; 97:9; லூக்கா 6:35

**2** **சங்கீதம் 41:12 - கர்த்தர் உங்களை நிலைநிறுத்துவார்**
**தியானத்திற்கு:** யாத். 9:16; 2 நாளா. 9:8; ரோமர் 14:4; 1 பேதுரு 5:10

**3** **ஏசாயா 31:5 - சேனைகளின் கர்த்தர்**
**தியானத்திற்கு:** ஏசாயா 54:5; எரே. 51:19; ஓசியா 12:5; ஆமோஸ் 4:13

**4** **2 கொரிந்தியர் 3:17 - விடுதலை அருளும் ஆவி**
**தியானத்திற்கு:** யோவான் 8:32,36; அப். 12:11; ரோமர் 7:6; கொலோ. 1:13

**5** **அப்போஸ்தலர் 18:10 - தேவன் உங்களோடுகூட இருக்கிறார்**
**தியானத்திற்கு:** உபா. 31:8; யோசுவா 3:7; நியா. 6:13-16; மத். 28:20

**6** **சங்கீதம் 86:10 - அதிசயங்களை செய்கிற தேவன்**
**தியானத்திற்கு:** யாத். 34:10; சங். 72:18; ஏசாயா 25:1; மீகா 7:15

**7** **எபேசியர் 2:13 - இயேசு கிறிஸ்துவின் இரத்தம்**
**தியானத்திற்கு:** யோவான் 6:53; ரோமர் 3:26; எபி. 13:12; 1 யோவான் 1:7

**8** **சங்கீதம் 115:12 - கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்**
**தியானத்திற்கு:** யோபு 14:13; சங். 40:17; ஏசாயா 55:8,9; எரே. 29:11

**9** **உபாகமம் 28:7 - உங்கள் சத்துருக்கள் ஓடிப்போவார்கள்**
**தியானத்திற்கு:** எண். 10:35; உபா. 6:19; 2 சாமு. 5:20; சங். 68:1

**10** **சங்கீதம் 103:13 - தேவன் இரக்கமுள்ளவர்**
**தியானத்திற்கு:** நெகே. 9:29-31; சங். 103:8; லூக்கா 1:49,50; 1 பேதுரு 2:10

**11** **2 பேதுரு 1:21 - பரிசுத்த ஆவியானவர்**
**தியானத்திற்கு:** ஏசாயா 44:3; யோவான் 3:34; அப். 2:17,18; தீத்து 3:7

**12** **யோவான் 3:36 - நித்திய ஜீவன்**
**தியானத்திற்கு:** மத். 19:29; லூக்கா 18:30; யோவான் 5:24; 1 யோவான் 5:11

**13** **ரோமர் 12:12 - ஜெபத்திலே உறுதி**
**தியானத்திற்கு:** அப். 1:13,14; ரோமர் 15:32; பிலி. 4:6; கொலோ. 4:2

**14** **சங்கீதம் 9:4 - நீதியுள்ள நியாயாதிபதி**
**தியானத்திற்கு:** ஆதி. 18:25; ஏசாயா 16:5; எரே. 11:20; 2 தீமோ. 4:8

**15** **நீதிமொழிகள் 19:11 - மன்னியுங்கள்**
**தியானத்திற்கு:** மாற்கு 11:25; எபேசியர் 4:32; கொலோசெயர் 3:13

**16** **சங்கீதம் 56:3 - கர்த்தரை நம்புங்கள்**
**தியானத்திற்கு:** 2 நாளா. 20:20; சங். 115:9-11; நீதி. 16:20; ஏசாயா 26:4

**17** **நீதிமொழிகள் 8:30 - கர்த்தருடைய சமுகத்தில் களிகூருங்கள்**
**தியானத்திற்கு:** நெகே. 12:43; ஏசாயா 29:19; யோவேல் 2:23; ஆபகூக் 3:18

**18** **யோவான் 11:40 - விசுவாசித்தால் தேவ மகிமை**
**தியானத்திற்கு:** எசேக்கியேல் 10:18,19; ரோமர் 5:1,2; 1 பேதுரு 1:8,9

**19** **ஏசாயா 65:23 - நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததி**
**தியானத்திற்கு:** ஆதி. 26:5; உபா. 7:11-14; யோசுவா 24:3; ஏசாயா 61:9

**20** **நீதிமொழிகள் 16:3 - உங்கள் யோசனை உறுதிப்படும்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 25:33; 2 நாளா. 30:23; நீதி 1:31; 2 கொரி. 8:10

**21** **ஏசாயா 41:10 - கர்த்தருடைய வலதுகரம்**
**தியானத்திற்கு:** யாத். 15:6; சங்கீதம் 18:35; 63:8; அப். 5:31

**22** **நீதிமொழிகள் 28:14 - கர்த்தருக்கு பயந்திருங்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 22:11-18; சங். 112:1,2; 128:1-4; நீதி. 14:26

**23** **ஏசாயா 49:25 - கர்த்தர் உங்களுக்காக வழக்காடுவார்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 24:15; சங்கீதம் 35:1; 43:1; ஏசாயா 51:22

**24** **நீதிமொழிகள் 8:17 - நம் சிநேகிதர்**
**தியானத்திற்கு:** யாத். 33:11; 1 சாமுவேல் 20:17; யோவான் 15:13-15

**25** **சங்கீதம் 148:14 - பரிசுத்தவான்கள்**
**தியானத்திற்கு:** லேவி. 20:26; சங். 37:28; நீதி. 2:8; மாற்கு 6:20

**26** **நீதிமொழிகள் 28:5 - கர்த்தரைத் தேடுங்கள்**
**தியானத்திற்கு:** சங். 105:3,4; ஏசாயா 55:6; ஆமோஸ் 5:4; மத். 7:7,8

**27** **சங்கீதம் 144:12 - கர்த்தர் உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார்**
**தியானத்திற்கு:** ஆதி. 22:17; சங். 128:6; நீதி. 20:7; ஏசாயா 54:13

**28** **நீதிமொழிகள் 13:12 - ஜீவவிருட்சம்**
**தியானத்திற்கு:** நீதிமொழிகள் 3:18; 11:30; 15:4; வெளி. 2:7

**29** **சங்கீதம் 119:148 - கர்த்தருடைய வசனம்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 3:1; 2 சாமு. 22:31; சங். 105:19; லூக்கா 4:32

**30** **நீதிமொழிகள் 10:28 - நம்பிக்கை**
**தியானத்திற்கு:** 2 இராஜா. 18:1-5; 1 நாளா. 5:20; யோபு 13:15; சங். 34:8




இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

இணையதளம்: www.jesuscalls.org/ta/dpv

Jesus Calls Tamil

www.familychannel.org

## அக்டோபர் 2025: முக்கிய திட்டங்கள்

சீஷா, சென்னை, கோயம்புத்தூர், ஜலந்தர் ஆகிய இடங்களில் தையல் பயிற்சி மையங்களை தொடங்கியுள்ளது. இதன் மூலம் நலிவுற்ற நூற்றுக்கணக்கான பெண்கள் ஆதரவு பெறுவார்கள். பின் தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்கள் பயன்பெறும் வண்ணம் சீஷா, அரசுடன் இணைந்து கடலூரில் சணல் பொருட்கள் தயாரிப்பு படிப்பையும் தொடங்கியுள்ளது.

ஜம்மு & காஷ்மீர் மற்றும் பஞ்சாப்பில் பருவமழையால் ஏற்பட்ட அழிவின்போது சீஷா குழுவினர் நிவாரண உதவியாக சமையல் பொருட்கள், பாத்திரங்கள், போர்வைகள் உள்ளிட்டவற்றை 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு வழங்கினர். இதனால் 450க்கும் மேற்பட்ட சிறுவர்கள் பயன்பெற்றனர். ஜம்முவில் உத்தம்பூர் மாவட்டத்திலுள்ள உள்ளூர் தலைவர் திரு. சுரிந்தர் தாக்கூர், சீஷா ஏற்ற நேரத்தில் செய்த நிவாரண உதவிகளை பாராட்டினார்.


கோயம்புத்தூர் தையல் பயிற்சி மையம்


அடையாறு தையல் பயிற்சி மையம்


கடலூர் சணல் பை தயாரிப்பு பயிற்சி


ஜலந்தர் தையல் பயிற்சி மையம்

# புத்தாடை வெகுமதியால் நம்பிக்கையும் சந்தோஷமும் அளித்தல்



ஏறத்தாழ 40% கிராமப்புற குழந்தைகள் தங்கள் குடும்ப கஷ்டத்தினால் கிழிந்த ஆடைகளை அணிகின்றனர். கடந்த ஆண்டு சீஷா 25,000 சிறுபிள்ளைகளுக்கு புத்தாடை வழங்கி, மகிழ்ச்சியையும் கௌரவத்தையும் அடையும்படி செய்தது. சீஷா, ஆண்டுதோறும் நலிவுற்ற ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்கு புத்தாடையை வெகுமதியாக வழங்கி வருகிறது.



இந்த ஆண்டு தொலைதூர கிராமங்களிலும் மலைப்பாங்கான இடங்களிலும், நகர்ப்புற குடிசைப் பகுதிகளிலும் வசிக்கும் 30,000க்கும் மேற்பட்ட சிறுபிள்ளைகளுக்கு புதிய ஆடைகளை வழங்கி மகிழ்ச்சிப்படுத்த சீஷா திட்டமிட்டுள்ளது. இந்தியா முழுவதும் சென்னை, கடலூர், கோயம்புத்தூர், வியாரா, ராஞ்சி, ஒடிசா, பஞ்சாப் மற்றும் கேரளா உள்ளிட்ட அநேக பகுதிகளில் புத்தாடை வழங்கப்பட உள்ளது. இந்த ஆண்டின் மகிழ்ச்சியான நேரம் நெருங்கிக்கொண்டிருக்கும்வேளையில் இந்தப் புதிய ஆரம்பத்திற்கு நீங்கள் கீழ்க்காணும் வழிகளில் உதவலாம்.

**தேவையோடு இருக்கிற 10 குழந்தைகளுக்கு புத்தாடை வழங்கிட ரூ.5,000/-**
**சீஷாவின் ஒரு கற்றல் மையத்திலுள்ள குழந்தைகளுக்கு புத்தாடைகள் வழங்கிட ரூ.12,500/-**
**ஒரு மலைப்பாங்கான குக்கிராமத்திலுள்ள குழந்தைகளுக்கு புத்தாடைகள் வழங்கிட ரூ.1,00,000/-**

ALL DONATIONS ARE TAX-EXEMPTED UNDER SECTION 80G

### பாரத்தை அகற்றுவோம்; மகிழ்ச்சியாய் கொண்டாடுவோம்



நான் நல்லூர்பதி என்கிற மலை கிராமத்தில் ஏழாம் வகுப்பு படிக்கிறேன். நான் சிறுவனாக இருந்தபோதே என் தாயாரை இழந்துவிட்டேன். என் தகப்பனார் தினக்கூலி வேலை செய்து, வீட்டை நிர்வகித்து வருகிறார். பண்டிகைகள் அவருக்கு பெரும்பாலும் பணக்கஷ்டத்தைக் கொடுப்பதாகவே இருக்கும். சீஷா எனக்கு புத்தாடை வெகுமதியாக வழங்குவதால் என் தகப்பனாரின் கவலை அகன்று போனது. புதிய, அழகான ஆடையில் என்னைப் பார்த்தபோது அவர் மகிழ்ச்சியடைந்தார். இந்த வெகுமதி என் குடும்பத்தின் பாரத்தை இலகுவாக்கியதோடு, சந்தோஷமாய் கொண்டாடவும் உதவியது.

– M. சஞ்சய், புத்தாடை பயனாளி, கோயம்புத்தூர்.

DONATE TO SEESHA

UPI ID : 9384015155@okbizaxis

G Pay PhonePe Paytm UPI pay
MOBIKWIK Freecharge

044 66660000
+91 9300 600 600

www.seesha.org
info@seesha.org

* When you Donate send the Details to +91 9300 600 600

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045

Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest






உங்கள் துக்கம்
சந்தோஷமாக மாறும்

# சென்னையில்

**வாலிபர் திருவிழா 2026**
ஜனவரி 3 (சனி) மாலை 6 மணி

**புத்தாண்டு ஆசீர்வாத கூட்டம்**
2026 ஜனவரி 4 (ஞாயிறு) மாலை 6 மணி

**Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர்**
**இக்கூட்டங்களில் ஊழியம் செய்து சிறப்பு பிரார்த்தனையை ஏறெடுப்பார்கள்**

இடம்: ஒய்எம்சிஏ ஸ்பிக் மைதானம், நந்தனம், சென்னை.

**தேவ ஊழியத்தில் பங்காளராகுங்கள்**

நகர்ப்புற ஊழியத்தை தாங்கி நேரிலும் இணையவழியாகவும் பங்கேற்கிற லட்சக்கணக்கான ஆத்துமாக்களை ஆசீர்வதிக்கும்படி உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

**இக்கூட்டங்களுக்கு என் ஆதரவு**

■ 100 பேர் வாழ்க்கையை தொடுவதற்கு ரூ.1,00,000/- ■ 500 பேர் வாழ்க்கையை தொடுவதற்கு ரூ.5,00,000/- ■ 10 பேர் வாழ்க்கையை தொடுவதற்கு ரூ.10,000/-

நான் ரூ................../- வழங்க விரும்புகிறேன்.

குடும்பமாய், நண்பர்களோடு வாருங்கள்; பாக்கியம் பெறுங்கள்.

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418


Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++


CATEGORY 1 Institution

# INDIA'S TOP RANKED UNIVERSITY

KARUNYANS GET HIRED BY TOP MNC's FROM YEAR TWO

# Admissions 2026 OPEN

APPLY NOW!



Programs Offered:

ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | ARTIFICIAL INTELLIGENCE | COMMERCE | FORENSIC SCIENCE | DIGITAL FORENSICS | PHYSICAL SCIENCES | MEDIA | ONLINE MBA

ACADEMIC COLLABORATORS

edveon | Google | PHOENIX Phoenix Medical Systems (P) Ltd. | suez | AMARON | FESTO | ZOHO

**Karunya Institute of Technology and Sciences,**
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu

**Toll Free: 1800 42 54 300, 1800 88 99 888**